எப்படித்
தியானிக்கக்கூடாது?

R. ஸ்டான்லி, B.E., M.TECH.,

திருமறைப் போதகராய்
மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்

StanleyOnBible
13 Church Colony
Vellore 632 006, India
<stanleyonbible@hotmail.com>

HOW NOT TO MEDITATE (Tamil)

Copyright 2010 R. STANLEY

First Edition : January 2010
Second Edition : March 2010
Third Edition : June 2012

Available in English also.

ஆங்கிலப் பதிப்பிலிருந்து ஆசிரியரால் தமிழாக்கப்பட்டது.

இச்சிறுநூலில் திருமறையின்
பழையதும் புதியதுமான மொழியாக்கங்கள்
இடம்பெற்றுள்ளன.

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

பொருளடக்கம்

முன்னுரை ... 5

1. வேதத்தின் எப்பகுதியையும் ஒதுக்கிவிடக்கூடாது. ... 7

2. வேதத் தியானத்தில் அவசரப்படக்கூடாது. ... 13

3. சோம்பேறித்தனமாய் இருக்கக்கூடாது. ... 19

4. சொந்த அறிவையே சார்ந்திருக்கக்கூடாது. ... 26

5. வசனச் சூழமைவை மறந்துவிடக்கூடாது. ... 33

6. வேதத்தைவிட அனுபவங்களுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது. ... 40

7. மறைவானவற்றைத் தோண்டித் துருவக்கூடாது. ... 47

8. ஜெபவாழ்வை அலட்சியப்படுத்தக்கூடாது. ... 53

9. கீழ்ப்படியத் தாமதிக்கக்கூடாது. ... 59

10. வேத அறிவு உங்களிடம் தேங்கிவிடக்கூடாது. ... 66

வேத வாசிப்பு அட்டவணை ... 76

எப்படித் தியானிக்கக்கூடாது ?

முன்னுரை

தனது வாழ்வின் இறுதிக் கட்டத்திற்குள் வந்துகொண்டிருந்த மோசே, தேவனுடைய மக்களது இரு இணையற்ற சிலாக்கியங்களை அவர்களுக்கு உபாகமம் 4:7,8இல் நினைப்பூட்டினான். ஒன்று அவர்களுக்கு ஜெபத்தைக் கேட்கும் ஆண்டவர் இருக்கிறார்: "நமது தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாய் இருக்கிறதுபோல தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய மக்கள் யார் ?" (வச 7). அடுத்தது, இந்த தேவன் அவர்களுக்குத் தமது சொந்த வார்த்தையைக் கொடுத்திருக்கிறார்: "இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் இணையான இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய மக்களும் யார் ?" (வச 8). வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர்கள் பேசுவதைக் கேட்பவரும் அவர்களோடு பேசுபவருமான தேவனைப் போன்றவர் வேறு யாருக்கும் இல்லை!

இந்த ஆரோக்கிய உபதேச வரிசையில் நான் எழுதிய முதல் நூல் ஜெபத்தைப் பற்றியது. இரண்டாம் நூலாகிய இது வேதத் தியானத்தைப் பற்றியது. முதல் நூல் *"எப்படி ஜெபிக்கக்கூடாது ?"* என்ற தலைப்பில் வெளிவந்தது. இந்நூல் *"எப்படித் தியானிக்கக்கூடாது ?"* என்ற தலைப்பில் வெளிவருகிறது. ஏன் இந்த எதிர்மறையான அணுகுமுறை ? சரியாய்க் கற்றுக்கொள்ளவேண்டுமானால் தவறாய்க் கற்றுக்கொண்டவைகளைக் களைந்தே ஆக

வேண்டும். எனவேதான், இயேசுவானவர் தமது சீடர்களுக்கு எப்படி ஜெபிக்க**வேண்டும்** என்று கற்றுக்கொடுக்குமுன்னர், எப்படி ஜெபிக்கக்**கூடாது** என்றே போதித்தார் (மத் 6:5−13). தானதர்மத்தைக் குறித்தும் உபவாசத்தைக்குறித்தும் பேசும்போதும் இதே வரிசையைத்தான் கடைப்பிடித்தார் (மத் 6:1−4, 16−18).

துர்வுபதேச வெள்ளத்திற்குத் தப்பி ஆரோக்கிய உபதேசத்தில் நிலைநிறுத்தப்படவேண்டுமானால் திருவசனத்திலிருந்து வரும் திருத்தங்கள் மூலமாகத் தவறானவைகளைக் களைந்து சரியானவைகளைப் பிடித்துக்கொள்ள வேண்டும். துர்வுபதேசமானது பொதுவாக சத்தியமும் பிழையும் இணைந்த ஒரு கலவையாகவே இருக்கும். இது வெளியரங்கமாக்கப்படவேண்டும். நூற்றுக்குநூறு அது பிழையானதாயிருக்குமானால் அதை எளிதில் அடையாளங் கண்டுகொள்ளலாம். ஆனால் அது வஞ்சகமானதொரு கலவையாயிருப்பதுதான் நிலைமையை மோசமாக்குகிறது. நமது சொந்த அறிவுத்திறன் அல்லது புத்திக்கூர்மையை வைத்து நாம் சத்தியத்தையும் பிழையானதையும் பிரித்து விடமுடியாது. நமது அனுபவங்களுங்கூட இதற்குப் போதாது. திருவசனத்தைக்கொண்டு மட்டுமே பிழையானதைச் சத்தியத்திலிருந்து பிரிக்கமுடியும். "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப்பார்க்கிறது" (எபி 4:12). ஆவியையும் ஆன்மாவையுங்கூடப் பிரித்துவிடுமாம்; அப்பப்பா, நினைவுகளையும் நோக்கங்களையுங்கூடப் பிரித்துவிடுமாம்!

இதை மனதிற்கொண்டவர்களாய், அடுத்துவரும் பக்கங்களில் "எப்படித் தியானிக்கக்கூடாது ?" என்ற தலைப்பில் 10 பாடங்களைப் படிப்போம்.

1

வேதத்தின் எப்பகுதியையும் ஒதுக்கிவிடக்கூடாது.

அநேகக் கிறிஸ்தவர்கள் வேதத்தில் தங்களுக்குப் பிடித்த ஒரு சில வசனங்கள், அத்தியாயங்கள் அல்லது புத்தகங்களை மட்டுமே வாசித்துத் தியானிக்கிறார்கள். சிலருக்கு எப்பொழுது பார்த்தாலும் சங்கீதம்தான் பிடிக்கும்; ஏனெனில் அதிலிருக்கக்கூடிய தியானக் கருத்துக்கள்தான் அவர்களது வாஞ்சை. வேறு சிலருக்கு எப்பொழுது பார்த்தாலும் நீதிமொழிகள்தான்; ஏனென்றால் வாழ்க்கைக்குத் தேவையான சன்மார்க்க நெறிகள்தான் முக்கியம் என்பது அவர்கள் கருத்து. அப்படியே வரலாற்றுக் குறிப்புகளையே அதிகம் விரும்புவோர் பழைய ஏற்பாட்டிலும் நான்கு சுவிசேஷங்களிலுமுள்ள சரித்திரத் தொகுப்பிலேயே நின்றுவிடுவர். உபதேசக் காரியங்களிலேயே துல்லியமாய் இருக்க நாடுவோர் தங்கள் தியான நேரம் முழுவதையும் நிருபங்களிலேயே செலவழிப்பர். இன்னும் சற்று விசாலமாய்ப் பார்த்தால், இருவகையினர் உண்டு: ஒரு கூட்டத்தார் பழைய ஏற்பாட்டிலேயே அதிக நேரம் செலவழிப்பவர்கள்; மற்றவர் புதிய ஏற்பாட்டைத் தவிர வேறு எதையும் தியானிக்கமாட்டார். இந்த இரண்டு ஓரங்களில் இருப்பதும் அபாயகரமானது. பழைய ஏற்பாட்டையே எப்பொழுது பார்த்தாலும் நீங்கள் படித்துக்கொண்டிருந்தால், கடவுள் என்ன இவ்வளவு கண்டிப்பானவராகவே இருக்கிறார் என்ற எண்ணம்தான் மேலோங்கி நிற்கும். மாறாக, புதிய ஏற்பாட்டிலேயே நீங்கள் உங்கள் தியானநேரம் முழுவதையும் செலவிட்டால், கடவுள் இவ்வளவு கனிவிரக்கமும் கிருபையுமுள்ளவராயிருக்கிறாரே என்பதுமட்டும்தான் உங்கள் நினைவில் நிற்கும்.

இதன் விளைவு என்னவாயிருக்கும் தெரியுமா ? பழைய ஏற்பாட்டிலேயே ஊறிப்போகிறவர்கள் பிரமாணக்காரராய் மாறி மகிழ்ச்சியற்ற கிறிஸ்தவர் ஆகிவிடுவர். அதே வேளையில் புதிய ஏற்பாட்டிற்கு வெளியே எதையும் தியானிக்காதவர்கள் கிறிஸ்து தரும் சுதந்தரத்தையும் விடுதலையையும் தவறாய்ப் புரிந்துகொண்டு கட்டுப்பாடும் கவனமும் இல்லாதவர்களாய்ப் போய்விடுவர்.

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இறைவனது இரு உதடுகள் என்பதே எனது தாற்பரியம். இரு உதடுகளும் இருந்தால்தான் தெளிவாகப் பேசமுடியும். பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது; புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு மலர்ந்துள்ளது. இந்தச் சம்பந்தத்தை நீங்கள் சரிவரப் புரிந்துகொண்டால்தான் வேத அறிவில் உங்களுக்குத் தெளிவுண்டாகும். முதிர்ச்சியடைந்த வேதபாரகன் எவனும் எப்படியிருப்பானென்று வரையறுத்தபோது ஆண்டவராகிய இயேசு இச்சத்தியத்தை வெளிக்கொண்டுவந்தார்: ‘‘விண்ணரசுபற்றிக் கற்றுக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தங்கள் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொண்டுவரும் வீட்டுத்தலைவன்போல் இருக்கின்றனர்’’ (மத் 13:52). வேதம்தான் தேவனுடைய ஞானப் புதையல்; அது அவரது அறிவுக் களஞ்சியம்; அது மனுக்குலத்திற்கான அவரது வெளிப்பாடு. அவருடைய ஞானத்தை அவர் எதிர்பார்க்கும் வகையில் நீங்கள் òçª J bf hŸs nt © L khd hš ,òÂa V%ghL **அத்துடன்** பழைய ஏற்பாடு ஆகிய இரு களஞ்சியங்களையும் தோண்டித் துருவவேண்டும். ஒன்று அடுத்ததை விளக்குகிறது.

இந்தத் தத்துவத்தை அப்போஸ்தலன் பவுல் தீமோத்தேயுவுக்குக் கோடிட்டு எழுதினான்: 2 தீமோத்தேயு 3:16,17, ‘‘வேத வாக்கியங்கள் **எல்லாம்** தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், **எந்த** நற்செயலையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசிப்பதற்கும், கடிந்துகொள்

ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நேர்மையாய் வாழப் பயிற்றுவிப்பதற்கும் பயனுள்ளவைகளாய் இருக்கின்றன.'' இவ்வசனத்திலுள்ள சொற்களின் உச்சநிலையைக் கவனித் திருக்கிறீர்களா ? வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' இறைத் தூண்டலால் எழுதப்பட்டவை; ஒன்றைவிட ஒன்று குறைந் தது அல்ல. ஏதோவொரு பகுதியை விட்டுவிட்டால் நாம் ''தேறினவர்களாக'' மாறமுடியாது; நாம் செய்கிற காரியங் கள் அரைகுறையாக மேலெழுந்தவாரியாகத்தானிருக்கும். இந்த வசனம் இறைவார்த்தையின் நான்கு அதிமுக்கிய பயன்களை வரிசைப்படுத்தியுள்ளது: ''உபதேசம்... கண் டிப்பு... சீர்திருத்தம்... நீதிநெறி பயிற்றுவிப்பு.''

அ) உபதேசம்

கிறிஸ்தவர்களாகிய நாம் நமது தனிவாழ்விற்கும் சபைவாழ்விற்கும் தேவையான உபதேசங்களைப் பிரதா னமாகப் புதிய ஏற்பாட்டு நிருபங்களிலிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும். ஏனெனில், நாம் புதிய உடன்படிக்கை யின் கீழ் வாழ்கிறோம்.

ஆ) கண்டிப்பு

நம்மைக் கடிந்துகொள்ளுதலுக்கான சத்தியங்களைப் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். கொரிந்து சபையாருக்கு எழுதும் போது அப்போஸ்தலன் பவுல் இதைக் குறிப்பிடுகிறான்: ''அவர்களுக்கு நிகழ்ந்த இவை **அனைத்தும்** மற்றவர் களுக்கு எச்சரிக்கையாக அமைகின்றன. இறுதிக்காலத்தில் வாழும் நமக்கு இவை **அறிவுரையாக** எழுதப்பட்டுள்ளன'' (1 கொரி 10:11).

இ) சீர்திருத்தம்

நான்கு நற்செய்தி நூல்களிலும் ஏராளம் திருத்தங்கள் தரப்பட்டுள்ளன. தமது நாட்களிலுள்ள மார்க்கத்தில் காணப்பட்ட மூடப்பழக்கவழக்கங்கள் மற்றும் திருமறைக்குப்

புறம்பான பாரம்பரியங்களுக்கு எதிராக இயேசுவானவர் வன்மையாய்க் குரல்கொடுத்தார். இதுதான் யூதத் தலை வர்களுக்கு வெகுவாய்க் கடுப்பூட்டியது. முடிவில் அவரைச் சிலுவையிலறைந்தார்கள். எடுத்துக்காட்டாக மத்தேயு 23ஆம் அத்தியாயத்தை வாசித்துப்பாருங்கள்.

ஈ) நீதிநெறி பயிற்றுவிப்பு

நீதிநெறிப்படி வாழுவதற்கான படிப்பினைகள் பெரு வாரியாக நீதிமொழிகள், பிரசங்கி போன்ற புத்தகங்களில் காணப்படுகின்றன. நடைமுறை வாழ்வுக்கான தத்துவங் களால் இப்புத்தகங்கள் நிரம்பிவழிகின்றன.

ஆம், பைபிளில் தேவையற்ற பகுதி என்று ஒன்றுமே யில்லை. எனவே அட்டை முதல் அட்டை வரை ஒன்றுவிடாமல் நாம் அதை வாசித்துத் தியானிக்கவேண்டும். ''மறைநூல் தரும் மனவுறுதியினாலும் ஊக்கத்தினாலும் நமக்கு நம்பிக்கை உண்டாகும்படி, முற்காலத்தில் எழுதப்பட்டவை **அனைத்தும்** நமக்கு அறிவுரையாகவே எழுதப்பட்டன'' (ரோ 15:4). தேவையற்றதென்று எதுவுமேயில்லை; முக்கிய மற்றதென்று ஒன்றுமேயில்லை! ''முழு'' வேதத்தையும் படிக்கவேண்டிய தேவையை இதற்குமேல் இன்னும் அழுத்திச் சொல்லமுடியாது. இது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல.

வேதத்தின் இறுதிப்பக்கத்தில் ஓர் எச்சரிப்பு உண்டு: வெளி 22:18,19, ''இந்தப் புத்தகத்திலுள்ள இறைவாக்கு களோடு யாரேனும் எதையாவது **கூட்டினால்**, இப்புத் தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். இந்தத் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் வசனங் களிலிருந்து எதையாகிலும் **எடுத்துவிட்டால்**, ஜீவப் புத்த கத்திலிருந்தும், பரிசுத்த நகரிலிருந்தும், இப்புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப்போடுவார்.'' முற்றுப்பெற்றுள்ள திருமறை யோடு எதையும் ''கூட்டுதல்'' கூடாது என்பதைத்தான்

பீடங்களிலிருந்து பிரசங்கிமார் ஓங்கியடிப்பதைப் பலமுறை கேட்டிருக்கிறோம். ஆனால் எழுதப்பட்ட வசனத்திலிருந்து எதையும் "எடுத்துப்போடுதல்" அல்லது "விட்டுவிடுதல்" என்பதைக் குறித்துப் போதுமான எச்சரிப்பு கொடுக்கப் படுவதில்லையே! "கூட்டுதலுக்கு" ஒரேயொரு தண்டனை தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது; "விட்டுவிடுதலுக்கோ" மூன்று தண்டனைகள் தரப்படுமாம்! பைபிளிலுள்ள சில பகுதிகளை வாசிக்காமல், தியானிக்காமல் இருப்பது "எடுத்துப்போடுதல்" அல்லது "விட்டுவிடுதலுக்குச்" சமம்தானே?

எனவேதான், வேதப்புத்தகத்தின் எப்பகுதியையும் தியானிக்காமல் ஒதுக்குவது நமக்குத்தான் கேடு என்பதை அப்போஸ்தலன் பவுல் எபேசு சபையின் மூப்பர்களுக்கு உணர்த்திக் கூறினான். அப்போஸ்தலர் 20:26,27, "தேவனுடைய ஆலோசனையில் **ஒன்றையும்** நான் மறைத்து வைக்காமல், **எல்லாவற்றையும்** உங்களுக்கு அறிவித்தபடியால், எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன்!" எவ்வளவு அழுத்தமான வார்த்தைகள், பாருங்கள்!

பிரசங்கிமாரே, சபை மேய்ப்பரே, உங்கள் சபையினருக்கு "முழு வேதத்தையும்" போதியுங்கள் என்று கெஞ்சிக்கேட்கிறேன். இன்றையச் சபையின் மிகப்பெரிய தேவை இதுவே. சராசரிக் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் வேதக் கல்வியறிவற்றோராகவே தவிக்கின்றனர். அவர்களுக்கு வேதத்திலுள்ள ஒரு சில வசனங்கள்தான் தெரியுமே தவிர, வேதம் தெரியாது. இதற்குக் காரணம் சபை மேய்ப்பர்கள் தான். இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சம் என்று இருக்கக் கூடாது. மக்களுக்கு முழுவேதத்தையும் கிரமமாய்ப் போதியுங்கள். அப்பொழுதுதான் வேதம் தெரியா பேதமை சபைகளிலிருந்து ஒழிக்கப்படும். வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருவருடங்களில் ஒருமுறை ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை வேதத்தை வாசித்துமுடிக்கும்படி எங்குமுள்ள கிறிஸ்தவர்க்கு அழைப்புவிடுக்கிறேன். இதற்கு

உதவியாக பல வேதவாசிப்பு அட்டவணைகள் உண்டு. உங்களுக்குப் பொருத்தமான அட்டவணை ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியாக, இச்சிறு நூலின் 76 முதல் 79 வரையுள்ள பக்கங்களில் ஓர் அட்டவணை தரப்பட்டுள்ளது.

நீங்கள் வேதத்தை வாசித்துக்கொண்டேபோகும்போது புரிந்துகொள்ளமுடியாத சில கடினமான பகுதிகள் இருக்கலாம். பரவாயில்லை, ஓரத்திலே ஒரு கேள்விக்குறி போட்டு விட்டுத் தொடர்ந்து வாசியுங்கள். அடுத்த முறை வாசிக்கும் போது இக்கேள்விக்குறிகள் பல ஆச்சரியக்குறிகளாய் மாறிவிடும்!!! மூன்றாம் முறை வாசிக்கும்போது இன்னும் பரவசமாயிருக்கும். வியப்புக்குறிகள் கூடி, வினாக்குறிகள் குறைந்துகொண்டேபோகும்! "இது ஏன் இப்படி?" என்று கேட்கிறீர்களா? மற்ற பாடப்புத்தகங்களெல்லாம் நீங்கள் படிக்கிற வகுப்பிற்கும் உங்கள் அறிவுத்திறனுக்கும் ஏற்றபடி மாறிக்கொண்டேயிருக்கும். திருமறையோ அப்படியல்ல. நீங்கள் இப்பொழுதுதான் மறுபடி பிறந்துள்ள குழந்தையாயிருந்தாலும், அல்லது ஆன்மீக வாழ்வில் 40 ஆண்டுகள் பயணித்துவிட்டவரென்றாலும், ஒரே புத்தகம்தான். முதல் தடவையில் புரியாதது இரண்டாம் முறை வாசிக்கும்போது புரியும்; இரண்டாம் முறை வாசிக்கும்போது புரியாதது மூன்றாம்முறை புரியலாம்; இப்படிப் படிப்படியாகப் புரிந்துகொண்டேயிருக்கும். 60 அல்லது 70 ஆண்டுகள் ஆண்டவரோடு நடந்தும் வேதத்தில் புரியாத புதிர்கள் நித்தியத்தின் அக்கரைக்கு நீங்கள் செல்லும்போது உங்களுக்குப் புரிந்துவிடும்! (1 கொரி 13:9-12).

எனவே, திருமறையின் எந்தப் பகுதியையும் வாசியாது, தியானியாது, விட்டுவிடாதீர்கள். கடவுளுடைய மனதையும் நம்மைக்குறித்த அவரது திட்டங்களையும் நமக்கு வெளிப்படுத்தும் வேதத்தின் 66 புத்தகங்களுக்காகவும் அவரை "நன்றி, நாதா!" என்று போற்றுவோம்.

2

வேதத் தியானத்தில் அவசரப்படக்கூடாது.

பரிசுத்த வேதத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்; முழுமையான வேதத்திற்காய் அவரைத் துதிப்போம்

நாம் வாழுகின்ற இக்காலத்தின் தன்மை என்ன ? எப்பொழுது பார்த்தாலும், எதை எடுத்தாலும், வேகம், ஓட்டம், ஆத்திரம், இப்படித்தான் ! இது கணனி யுகமல்லவா ? பொதுவான உணவகங்களைவிட துரித உணவகங்களுக்குத்தான் கிராக்கி ! கார்களெல்லாம் வேகமாய்ப் போனால் போதாது, பறக்கவேண்டும் ! இந்த மனப்பான்மையும் போக்கும் வேதத்தியானத்திற்கு ஒத்துவராது.

நாம் பொதுவாக வேதத்தை வாசிக்கும்போது, அது நமது தலைக்கு அறிவையும், அதைவிட முக்கியமாக நமது இருதயத்திற்கு ஒரு செய்தியையும் கொடுக்கிறது. அறிவானது ஒருவேளை அதிவேகத்தில் கிடைத்துவிடும். ஆனால் கடவுளிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அவசரப்படக்கூடாது, நேரமெடுக்க வேண்டும். திருவசனத்திலிருந்து தனக்கு ஒரு செய்தி கிடைக்கவேண்டுமென்று சங்கீதக்காரன் எவ்விதம் கடவுளுக்குமுன் காத்துக்கிடந்தான் பாருங்கள்: "ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்; என் நெஞ்சம் காத்திருக்கின்றது, அவரது சொற்களுக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கின்றேன்" (சங் 130:5). சங்கீதக்காரன் தனக்கு முன்பாக வேதவாக்கியச் சுருள்களை விரித்துவைத்துக்கொண்டு, அவைகளிலிருந்து ஏதாவதொரு செய்தி வந்துவிடாதாவென்று ஏங்கிக்கொண்டிருப்பதை என்னால் கற்பனைசெய்து பார்க்க முடிகிறது. நாமும் இறைவார்த்தையை வாசிக்கும்போதெல்லாம் ஏதாவதொரு செய்தி அதின் பக்கங்களிலிருந்து வந்துவிடாதாவென்று எதிர்பார்த்தவண்ணமிருக்கவேண்டும். பிரியமானவர்களே, பைபிள் என்பது துரிதவுணவுமல்ல, நொறுக்குத்தீனியுமல்ல ! முழுமையான சரிவிகிதவுணவை நாம் சாப்பிடவேண்டுமானால் நேரமெடுத்து சாவகாசமாய்த் தியானிக்கவேண்டும். அப்பொழுதுதான் திருவசனம் நமது உள்ளான மனிதனுக்குள் ஊடுருவிச்செல்லும்.

திருமறையில் 66 புத்தகங்கள் உண்டு. அதில் மிக நீண்ட புத்தகம் சங்கீதப் புத்தகம்தான். இப்புத்தகம் திருப்பாடல்கள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நீண்ட புத்தகத்தில்தான் வேதத்திலேயே மிக நீண்ட அத்தியாயம் இருக்கிறது. அதுதான் 119ஆம் சங்கீதம். அதிலுள்ள 176 வசனங்களில் ஒவ்வொன்றும் வேதத்தைப் பற்றியது. எடுத்து வாசித்துப் பாருங்கள், வசனம் வசனம் வசனம் என்றேயிருக்கும். இந்த மிக நீண்ட புத்தகத்தின் முதல் அத்தியாயமே திருமறைத் தியானத்தைப்பற்றியே பேசுகிறது: சங்கீதம் 1:1,2, "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனிதன் நற்பேறு பெற்றவன்." இந்த வசனங்களிலுள்ள "செய்யக்கூடாது" எனும் காரியங்களையும், "செய்யவேண்டும்" எனும் காரியத்தையும் கவனித்துப் பாருங்கள். அவன் கேலிக்கூத்து பண்ணிக்கொண்டிருப்போரோடு உட்கார்ந்து நேரத்தை வீணடிக்காமல், திருவசனத்திற்குமுன் அமர்ந்துவிடுகிறான். பொழுதுபோக்குகளில் பைத்தியமாயிருப்பதைவிட வேதத்தியானமே அவனது பொழுதுபோக்காகிவிடுகிறது !

திருமறைத் தியானம் என்று வரும்போது, தேவையற்ற, அவ்வளவு முக்கியமில்லாத, காரியங்களை நமது வாழ்விலிருந்து வெட்டியெறியத்தான் வேண்டும். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்களில் முக்கியமான ஒருவராகிய எரேமியாவின் சொந்த அனுபவம் இதுவே. அவனது சாட்சியைக் கவனியுங்கள்: எரேமியா 15:16, ''உமது வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன். உமது வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தன.'' அடுத்த வசனத்திலேயே அவன் என்ன சொல்லுகிறானென்று பாருங்கள்: ''நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கை என்மேலிருந்ததால் நான் தனித்து உட்கார்ந்தேன்'' (வச 17). நாம் தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பதில் தரமான நேரம் செலவழிக்கவேண்டுமானால், தீங்கற்றதாய்க் காணப்படும் சில பொழுதுபோக்குகளைக் கூடத் தியாகம்பண்ணவேண்டியதிருக்கும். அப்பொழுதுதான் அவசரப்படாமல், நிதானமாக, அமைதியாக, தியானத்தில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளமுடியும். தொலைக்காட்சிப் பெட்டிக்குமுன் சராசரியாக எவ்வளவு நேரம் செலவழிக்கிறீர்களென்று பாருங்கள். வேதத்தியானம் என்று வரும்போதோ, ''ஆத்திரம், தோத்திரம், ஆமேன்'' என்றல்லவா இருக்கிறது ?

காலை 6 மணியிலிருந்தே இன்றைய உலகு நெருக்கடியும் சந்தடியும் நிறைந்ததாகிவிடுகிறது. இறைவார்த்தையைத் தியானிக்க சங்கீதக்காரன் அதிகாலை வேளையைத் தெரிந்துகொண்டான். அவனது சாட்சி நமக்கொரு சவால்: ''அதிகாலையில் நான் எழுந்து சத்தமிட்டேன்; உமது வசனத்திற்குக் காத்திருக்கிறேன். உமது வசனத்தைத் தியானிக்கும்படி குறித்த சாம நேரங்களுக்குமுன்னரே என் கண்கள் விழித்துக்கொள்ளும்'' (சங் 119:147,148). இன்றையப் பாணியில் இதைச் சொல்லவேண்டுமானால், ஐந்து மணிக்கு அலாரம் அடிக்குமுன்பதாகவே அவன் எழும்பிவிடுகிறானாம்! அவனது இருதயத்தின் ஏக்கம்

அவ்வளவாயிருப்பதால் அவனுக்கு அலாரமே தேவையில்லை போலும்! நமது அனுபவம் ? அலாரம் அடித்தவுடன் கோபத்தில் பொத்தானை அழுத்திவிட்டு உறக்கத்தைத் தொடருகிறோம். நாம் உண்மையாகவே வசனத்தின்மீது நேசம் கொள்ளாவிடில் நமது நிலை இப்படித்தானிருக்கும். படுக்கையிலிருந்து சீக்கிரம் எழும்பமுடியாததற்கு ஒரு காரணம் நேரப்படி படுக்கைக்குச் செல்லாததே. சீக்கிரம் தூங்கி சீக்கிரம் எழுந்திருக்கவேண்டும் (Early to bed, Early to rise!) என்ற பழங்காலப் பொன்னான சட்டத்திற்குள் வரும்வரை நிலைமை முன்னேற வாய்ப்பில்லை. அதிகாலை வேளையில்தான் உலகத்திலும் சத்தம் குறைவு; உங்கள் மனதிலும் அமைதி அதிகம். அதுவே பொன்னான நேரம்.

வேதத்தைத் தியானிப்பது என்பது வெறுமனே வாசிப்பது மட்டுமல்ல. கடவுளது ''சத்தம்'' உங்கள் இருதயத்தில் ஒலிக்கும்வரை வாசித்த வசனப் பகுதியைச் சிந்தித்துக் கொண்டேயிருக்கவேண்டும். ''கேட்பதாலும்,'' திருவசனத்தைக் கேட்டுக்கொண்டேயிருப்பதாலுமே விசுவாசம் வரும், அது வளரும் (ரோ 10:17). நாம் பொறுமையாய்த் திருவசனத்தை வாசித்து, அதைத் தியானிப்பதில் நேரம் செலவழித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தருடைய மெல்லிய சத்தம் நமது இருதயத்தில் கேட்கும். அவரது சத்தம்தான் அவரது வார்த்தையை நமது இருதயத்தில் நட்டிவிடும் (யாக் 1:21). இதோவோர் எடுத்துக்காட்டு: திருமுழுக்கினன் யோவான் ஒரு சத்தமாக வந்து, வார்த்தையானவராகிய இயேசு கிறிஸ்துவை நட்டிவிட்டு (அல்லது காட்டிவிட்டு) மறைந்தான். வார்த்தையாகிய கிறிஸ்து வந்ததும் சத்தமாகிய யோவான் கொஞ்சங்கொஞ்சமாய் மறையத் துவங்கினான். திருவசனத்தை நாம் தியானிக்கும்போதெல்லாம் நடப்பது இதுதான். நீங்கள் திருவசனத் தியானத்தில் தொடர்ந்து தரித்திருக்கும்போது, கர்த்தரின் சத்தம் அவரது வார்த்தையை உங்கள் இருதயத்தில் நட்டிவிடும். கர்த்தரின் சத்தம் உங்கள் இதயத்தையும் ஆவியையும் மான்குட்டிகளைப்போலத் துள்ளச்செய்யும் (சங் 29:6,7).

பொதுவாக ஒவ்வொரு நாளும் நமக்கு வேலைப்பளு நிறைந்ததாகவே காணப்படுகிறது. நாளின் முடிவில் அப்பாடா என்று உட்கார்ந்துவிடுகிறோம். அதிகாலையில் எழும்புவது கடினமாகிவிடுகிறது. இதற்கு நிவாரணமே கிடையாதா ? இதற்கு நான் ஓர் ஆலோசனை தர விரும்புகிறேன். வார நாட்களில் வேதத்தியானத்தில் கிரமமாக, நிதானமாக, நேரம் செலவழிக்க முடியாவிடில், வாரயிறுதி நாட்களில் கூடுதல் நேரமெடுத்துச் சரிசெய்ய முயற்சியுங்கள். வாரயிறுதியில் கூட்டம் கூட்டம் என்று அலையாதீர்கள். ஞாயிறன்று ஒரு நல்ல ஆராதனையில் பங்குபெறுங்கள், அது போதும். சனிக்கிழமை மதியத்தையும் ஞாயிறு மதியத்தையும் நிதானமாய் உட்கார்ந்து வேதத்தைத் தியானிக்கவும், ஆராயவும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கூட்டம் கூட்டம் என்று நீங்கள் போய்க்கொண்டே இருந்தால் முடிவில் பலியாவது உங்கள் வேதத்தியான வேளைதான். கவனம் ! உடல் சுகவீனமானாலோ, நெருங்கியவர் ஒருவருக்கு உதவி செய்யவேண்டுமென்றாலோ, நாம் அலுவலகத்திலிருந்து விடுப்பு எடுக்கிறோமல்லவா ? வேதத்தை நேரமெடுத்துத் தியானிப்பதற்கென்றே அவ்வப்போது விடுப்பு எடுத்தாலென்ன ? கூடாதா ?

“உமது வார்த்தை கிடைத்தவுடனே நான் அதை உட்கொண்டேன்” என்றான் எரேமியா (எரே 15:16). ரொட்டியை முகர்ந்துபார்ப்பதும், பிய்த்துப்பார்ப்பதுமாகவே இருந்தால் போதாது, அதைச் சாப்பிடவேண்டும். திருவசனத் தியானமென்றால் அதேதான். பிசாசுக்கு எதிராக இயேசுவானவர் அடித்துக்கூறியது அதுதான்: “மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்” (மத் 4:4).

ஒவ்வொரு நாளும் திருவசனத்தைத் தியானிப்பதற்கென்று தரமான நேரமொன்றைப் பிரித்துவைப்பேன் என்று

இவ்வரிகளை வாசித்துக்கொண்டிருக்கும்போதே தீர்மானியுங்கள். வாரயிறுதி நாட்களில் கூடுதல் நேரம் செலவழிப்பேன் என்றும் தீர்மானியுங்கள். இதுவே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுக்கக்கூடிய அதிமுக்கிய தீர்மானமென்று சொல்லுவேன். ஏனெனில், திருவசனத் தியானத்திற்குக் கொடுக்கவேண்டிய நேரம் மட்டும் அதற்குக் கொடுக்கப்பட்டுவிட்டால், வாழ்வின் பிற குறைபாடுகள் எல்லாம் ஒவ்வொன்றாய் மறையத்துவங்கும். பக்தன் D.L. மூடி (1837−1899) சொன்னது: “பைபிள் இல்லாத நாள் பாழான நாள் !” நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ள வேண்டிய சில கேள்விகள்: “எனது வாழ்விலிருந்து எவற்றையெல்லாம் நான் ஒதுக்கிவிடலாம் ? தரமான நேரத்தை வேதத் தியானத்திற்குக் கொடுக்கும்படி எவற்றிற்கெல்லாம் நான் முன்னுரிமையை (priority) மாற்றியமைக்கவேண்டும் ?” திருமறைக்குத் திரும்புவோம் ! Back to the Bible! ஆண்டவரது வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதில் தியானமாயிருப்பவன் நற்பேறு பெற்றவன்; அவன் செய்வதனைத்திலும் சித்தி பெறுவான் (சங் 1:2,3).

3

சோம்பேறித்தனமாய் இருக்கக்கூடாது.

கல்வியுலகில் தேறவேண்டுமானால் அறிவுக்கூர்மை இருந்தால்மட்டும் போதாது, கடின உழைப்பும் அவசியம். அதைப்போலவே வேத ஆராய்ச்சியிலும் அகத்தூண்டலும் இருக்கவேண்டும்; அதே வேளையில் சிரமமெடுத்துப் படிக்கவும் வேண்டும். வேத வாக்கியங்களை "ஆராய்ந்துபாருங்கள்" என நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (யோ 5:39). அவற்றை வெறுமனே வாசித்துக்கொண்டேபோனால் போதாது. நீதிமொழிகள் 2:3−5இல் இதைக் குறித்த சொற்சித்திரம் ஒன்றுண்டு: "ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடினால், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டுகொள்வாய்." இங்கே நான்கு காரியங்களைச் செய்யும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்: "கூப்பிடு... அழைத்திடு... நாடு... தேடு." அதாவது, வேதத்தைத் தியானிக்கும்போது ஏனோதானோவென்று இருக்கக்கூடாது. மிகவும் கருத்தோடும் கவனத்தோடும் அதைச் செய்யவேண்டும் என்பதையே இந்த நான்கு சொற்களும் வலியுறுத்துகின்றன. கூழாங்கற்கள்தான் வேண்டுமானால் ஆற்றோரம் நடந்து சென்றால் போதும். ஆனால் முத்துக்கள் தேவையானால் ஆழ்கடலுக்குள் சென்றே ஆகவேண்டும். வேதத்தின் பக்கங்களைச் சும்மா திருப்புவதும், இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சம் என்று வாசிப்பதும் அவ்வளவு பயன் தராது.

நேரமெடுத்து, சாவதானமாய்க், கருத்தூன்றி அதைப் படிக்கவேண்டும். வேதத்திலுள்ள சத்தியங்களை அறிந்து கொள்ளவேண்டுமென்று அதற்காய் ஏங்கவேண்டும். அது ஒரு புதையல் வேட்டைபோல் இருக்கவேண்டும்.

வேத ஆராய்ச்சி தரும் நன்மைகள் கொஞ்சநஞ்சமல்ல. அது எப்படியென்று ஏசாயா 34:16 விளக்குகின்றது: "கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் தவறாது; இவைகளில் ஒன்றும் ஜோடி இல்லாதிராது. அவரது வாய் இதைச் சொல்லிற்று. அவரது ஆவி அவைகளைச் சேர்க்கும்." ஆர்வமான ஆராய்ச்சியின் இரு முக்கிய பயன்கள் இதோ: (அ) "இவைகளில் ஒன்றும் தவறாது." அதாவது, நீங்கள் வேதத்தை ஆழ்ந்து தியானிக்க, தியானிக்க, அது எவ்வளவு நிசமானது, நிச்சயமானது என்பது உங்களுக்குப் புரியும். (ஆ) "இவைகளில் ஒன்றும் ஜோடி இல்லாதிராது." அதாவது, உங்களுக்குத் தெளிவு கூடிக் கொண்டேயிருக்கும். எப்படியென்றால், ஒரு வசனத்தைப் படிக்கும்போது இன்னொரு வசனம் இந்த வசனத்திற்கு விளக்கம் கொடுக்கும். வேதம் வேதத்தை விளக்கும். சுவிசேஷகர் D.L. மூடியின் கூற்று பொன்னானது: "வேதமே வேதத்திற்கு இணையற்ற வியாக்கியானம்." The BIble is the Bible's best Commentary!

பெரெயா என்ற நகரிலுள்ள விசுவாசிகள் இடைவிடாது வேதத்தைத் தியானித்துக்கொண்டேயிருந்தார்கள். அவர்களை அப்போஸ்தலர் 17:10−12இல் சந்திக்கிறோம். தெசலோனிக்கேயா என்ற நகரில் ஊழியம் செய்துவிட்டு அப்போஸ்தலர்களாகிய பவுலும் சீலாவும் பெரெயாவிற்குச் சென்றார்கள். பெரெயாவிலுள்ளவர்கள் தெசலோனிக்கேயரைவிட நற்குணசாலிகளாகவும், பரந்த அறிவுள்ளவர்களாகவும் இருந்தார்களென்று வாசிக்கிறோம். ஏனென்றால், அவர்கள் திருவசனத்தை ஆவலாய்க் கேட்டு, அதை ஏற்றுக் கொண்டதோடு நின்றுவிடாமல், காரியங்கள் அப்படித் தானிருக்கின்றனவா என்று தினமும் "ஆராய்ந்து" பார்த்

தார்களாம்! விசுவாசிகளிடையே காணப்பட்ட இவ்வித வசன வாஞ்சையின் வெளிப்படையான விளைவை 12ஆம் வசனத்தில் வாசிக்கிறோம்: “ஆதலால் அவர்களில் அநேகம் பேரும், கனம்பொருந்திய கிரேக்கரில் அநேக பெண்டிரும், ஆடவரும் விசுவாசித்தார்கள்.” ஆம், அறிவுத் திறன் மிக்கவர்களும் திருவசனத்திற்குமுன் அடிபணிந்தனர். இந்த ஊரிலுள்ள விசுவாசிகளைவிட அடுத்த ஊர் விசுவாசிகள் எவ்வளவு அதிகமாய்ப் பணம்கொடுத்தார்கள் என்றோ, எத்தனை நிகழ்ச்சிகள் கூடுதலாய் நடத்தினார்கள் என்றோ அல்ல, எவ்வளவு ஆர்வமாய்த் திருவசனத்தைத் தியானித்தார்கள் என்று சரித்திராசிரியன் லூக்கா ஒப்பிடுகிறான்! வெறுமனே வேதத்தை வாசித்தால் போதாது, அதை ஆழமாய்த் தியானிக்கவேண்டும் என்று நமக்குச் சொல்லுவதற்காகவே லூக்கா இந்த ஒப்புமையைத் தருகிறான். கிரமமாய், சிரமமெடுத்து வேதத்தைத் தியானிக்க நான் உங்களுக்குச் சில நடைமுறை ஆலோசனைகளைத் தருகிறேன்—

❒ புரிந்துகொள்ளுவதற்கு எளிய நடையிலுள்ள, அதே சமயத்தில் உங்களுக்குப் பிடித்தமான, ஒரு வேத மொழியாக்கத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். இன்று பல புதிய மொழியாக்கங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில், New King James Version (NKJV), New International Version (NIV), English Standard Version (ESV) போன்றவை நல்ல மொழியாக்கங்கள். தமிழில் பழைய மொழிபெயர்ப்பு வேதத்திலேயே (OV) பழகிப்போனவர்கள் புதிய மொழியாக்கங்களை வேண்டவே வேண்டாம் என்று தள்ளிவிடுவது சரியல்ல. இன்று தமிழ்க் கிறிஸ்தவ உலகில் நெடுங்காலமாகப் பயன்படுத்தப்பட்டுவரும் Old Version (OV) என்பதற்கு முன்னரும் பல மொழியாக்கங்கள் இருக்கத்தான் செய்தன. ஒவ்வொரு தலைமுறையிலும் மொழியும் நடையும் மாறிக்கொண்டே வருகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எந்த மொழிபெயர்ப்பும் நூற்றுக்குநூறு குறைவற்றதுமல்ல,

நூற்றுக்குநூறு குறைவுள்ளதுமல்ல. உங்கள் தியானத்திற்கும் (Meditation) நீங்கள் மனனம் செய்வதற்கும் (Memorisation) ஒரு மொழியாக்கத்தை வைத்துக் கொண்டு, ஆராய்ச்சிக்கென்று (Study) எத்தனை மொழியாக்கங்களை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொண்டால்தான் வழிபிசகமாட்டீர்கள். திருமறை எழுதப்பட்ட எபிரெயு, கிரேக்கு ஆகிய மூலமொழிகளைப் படிக்காத என்னைப் போன்றோர்க்கு எவ்வளவு மொழியாக்கங்களைப் பயன்படுத்தமுடிகிறதோ அவ்வளவு நல்லது. நான் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏறத்தாழ 50க்கும் மேற்பட்ட மொழியாக்கங்களைப் பயன்படுத்துகிறேன். ஒன்வொன்றையும் வாசித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துகொள்ளுகிறேன். இச்சிறுநூலிலும் பழையதும் புதியதுமான மொழியாக்கங்களை இடத்திற்கேற்றவாறு பயன்படுத்தியுள்ளேன்.

❒ உங்களது ஆராய்ச்சிக்காக கூடியமட்டும் பெரிய எழுத்துக்களும், ஓரங்களில் போதுமான அளவு காலியிடங்களுமுள்ள (wide margin) வேதப் புத்தகத்தை வாங்கிக் கொள்ளுங்கள். ஒரு நல்ல பந்துமுனைப் பேனா (ballpen) இல்லாமல் படிக்கத் துவங்காதீர்கள். வாசித்துக்கொண்டிருக்கும்போது ஒரு சொல்லோ, சொற்றொடரோ, வரியோ, வசனமோ உங்களுக்கு முக்கியமாகத் தோன்றினால் அதை உடனே அடிக்கோடிடத் தயங்காதீர்கள். வேதாகமக் குறிப்பேடு (Bible Notebook) என்று ஒன்றை வேதத்தை வாசிக்கும் போதெல்லாம் உங்களருகில் வைத்துக்கொள்ளுங்கள். நல்ல கருத்துக்களையும், முக்கிய குறிப்புகளையும் உடனுக்குடன் இந்தக் குறிப்பேட்டில் எழுதிவிடுங்கள். இதில் சோம்பேறித்தனமிருந்தால் அநேகக் குறிப்புகளை மறந்துவிடுவீர்கள். விதை முளைக்குமுன் பறவைகள் கொத்திக்கொண்டு போய்விடுகின்றன என இயேசு சொன்னது இதுதான். சில வசனங்களையெல்லாம் அப்படியே எடுத்துக் குறிப்பேட்டில் எழுதிக்கொள்வது சுலபமாய் மனனம் செய்யவும் ஏதுவுண்டாக்கும். இது எனது அனுபவம்.

❒ ஒரு Bible Dictionaryயும் (வேத அகராதி) வைத்துக் கொள்ளுங்கள். வேதாகம நாட்களின் மக்களது பின்னணிகள், கொண்டாட்டங்கள், கலாச்சாரங்கள், பழக்கவழக்கங்கள், காலநிலை, சம்பவங்கள் போன்றவற்றையெல்லாம் இவ்வித அகராதிகளில் காணலாம். வேத வசனங்களை வாசிக்கும்போது அந்த வசனங்கள் எழுதப்பட்ட பின்னணியை மனதில் வைத்துக்கொண்டால் நல்ல தெளிவுடன் கருத்துக்களைப் புரிந்துகொள்ளலாம். இஸ்ரவேல் நாட்டிற்குப் பயணிக்கும் வசதி எல்லாருக்கும் இருக்காது. கவலை வேண் டாம். ஒருமுறை வேத அகராதி முழுவதையும் வாசித்து விடுவது நூறுமுறை இஸ்ரவேல் நாட்டிற்குச் சென்று வந்ததுபோல்! ஒவ்வொரு வசனத்தின் பின்னணியையும் விளக்கும் Bible Background Commentary என்று, இரு ஏற்பாடுகளுக்கும் தனித்தனியே, Intervarsity Fellowship என்ற குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. அபாரம்.

❒ இன்று நமக்குக் கிடைக்கும் ஏராளம் ஆராய்ச்சி வேதங்களுக்காய் (Study Bibles) ஆண்டவரைத் துதிப்போம். ஆங்கிலத்திலுள்ள Scofield Reference Bible, Dake's Annotated Reference Bible போன்றவை வேதப் பண்டிதர்களாகிய ''தனி நபர்களால்'' தயாரிக்கப்பட்டவை. ஆனால், NIV Study Bible, NKJV Study Bible, ESV Study Bible (2008) போன்றவை பல நாடுகளையும், சபைப்பிரிவுகளையும் சேர்ந்த வேதப் பண்டிதர்களடங்கிய ''குழுக்களால்'' உருவாக்கப்பட்டவை. இரண்டாம் வகைதான் முதல் வகையைவிடப் பாதுகாப்பானது. தமிழிலும் *நிறைவாழ்வு வேதாகமம், வாழ்வியல் விளக்க வேதாகமம், சொல்லோவிய வேதாகமம்* போன்ற ஆராய்ச்சி வேதங்கள் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் வேதத்தை வாசித்துப் பழகாதவர்களுக்கு இந்தத் தமிழ் ஆராய்ச்சி வேதங்கள் பேருதவி. வேதாகமச் சொல்லகராதி (Bible Concordance) ஒன்றையும் தரமான வேதாகம வியாக்கியானங்களையும் (Bible Commentaries) பயன்படுத்துங்கள்.

r எந்த ஆராய்ச்சி வேதாகமத்தையும், வேத ஆராய்ச்சி நூலையும் வாங்குமுன் நம்பத்தகுந்த வேதப் போதகர் ஒருவரிடம் கலந்தாலோசியுங்கள். இல்லையேல் எதை வாங்குவதென்று குழம்பிவிடுவீர்கள். நான் இறையியல் பயின்றவன் (theologian) அல்ல. இங்கு நான் குறிப்பிட்டுள்ள இந்த உதவி நூல்களையெல்லாம் பயன்படுத்தித்தான் வேதத்தைப் படித்துவருகிறேன்; அதற்காய் என் தேவனைத் துதிக்கிறேன். ''இவைகளெல்லாம் என்னத்திற்கு ? ஆண்டவர் நேரடியாக வானத்திலிருந்து எனக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறார்'' என்று சிலர் சொல்லுவதுண்டு. தங்களுக்குச் சாதகமாக 1 யோவான் 2:27ஐயும் மேற்கோள் காட்டிவிடுவார்கள்: ''நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது; ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல. அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருங்கள்.'' மக்கள் தவறாய் வசனங்களை மேற்கோள் காட்டுவதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அப்போஸ்தலன் ஏன் இதை எழுதினான் என்பதைப் புரிந்துகொள்ள முந்திய வசனத்தைப் பாருங்கள்: ''உங்களை **வஞ்சிக்கிறவர்களைக் குறித்து** இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'' (வச 26). முறையாக, ஆரோக்கியமாக, திருவசனத்தைப் போதிக்கிறவர்களைக் குறித்து 27ஆம் வசனம் எழுதப்பட்டதல்ல. துர்வுபதேசக்காரர் வேதத்திற்கு மாறானவற்றைப் போதிக்கும்போது, நமக்குள்ளிருக்கும் அபிஷேகம் ஒரு சலசலப்பைக் கொடுக்கும். இதுதான் இவ்வசனத்தின் பொருள்.

நாமே தனித்தும் திருவசனத்தைப் படிக்கவேண்டும்; பிறரிடமிருந்து உதவியும் பெற்றுக்கொள்ளவேண்டும். இப்படித்தான் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்குச் சொல்லிக்கொடுத்தான். முதலாவது அவன் எழுதியது: ''நான் வருமளவும் வாசிக்கிறதிலும், புத்திசொல்லுகிறதிலும்,

உபதேசிக்கிறதிலும் கவனமாயிரு'' (1 தீமோ 4:13). அதைத் தொடர்ந்து, ''நீ தேறுகிறது யாவருக்கும் தெரியும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டிரு, இவைகளிலே நிலைத்திரு'' (வச 15). இவையெல்லாம் தனிப்பட்டு தீமோத் தேயு செய்யவேண்டியவை. இது ஒரு பக்கம். அடுத்த பக்கத்தைப் பவுல் தனது இரண்டாம் கடிதத்தில் எழுது கிறான்: 2 தீமோத்தேயு 2:2, ''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனிதரிடம் ஒப்புவி.'' இன்று உயிரோடிருக்கும் பிரசங்கிமாரையும், வேதப் போதகர் களையும் ''கேட்க'' முடியும். மறைந்துபோன கடந்த காலப் போதகர்களிடமிருந்து எப்படிப் பயனடையமுடியும் ? அவர் கள் எழுதியவற்றைத்தானே ''வாசிக்க'' முடியும் ? எனவே, ''வானத்திலிருந்து தொப்பென்று எனக்கு விழுந்துவிடும்'' என்ற வஞ்சக எண்ணத்திற்குப் பலியாகிவிடாதீர்கள். உங்கள் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகிவிடும்.

(இந்த ஆராய்ச்சி நூல்களைப்பற்றிக் கூடுதல் தெரிந்து கொள்ள விரும்பினால் உங்களுக்கு உதவ நான் ஆயத்தம். விசுவாசிகள் தரமான, நம்பிக்கையான, வேத ஆராய்ச்சி நூல்களை வாங்கி, வாசித்து, வளர்ந்து, பிறருக்கும் உழியம் செய்யும் வகையில் இத்தனை ஆண்டுகளும் பலருக்கு உதவியிருக்கிறேன். நீங்கள் ஆர்வமாக, ஆழமாக, திரு மறையைப் படித்து ஆசீர்வதிக்கப்பட்டு, பிறருக்கும் ஆசீர் வாதமாக மாறவேண்டுமென்று உங்களை வாழ்த்துகிறேன்.)

4

சொந்த அறிவையே சார்ந்திருக்கக்கூடாது.

இறுதிக்காலத்தைக் குறித்து அப்போஸ்தலன் பவுல் கொடுத்த முன்னறிவுப்புகளில் கடுமையானதொன்றை 2 தீமோத்தேயு 4:3,4இல் வாசிக்கிறோம்: ''ஆரோக்கியமான உபதேசத்தை மக்கள் பொறுக்க மனதில்லாமல், செவித் தினவுள்ளவர்களாகி, தங்கள் சொந்த விருப்பங்களுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாய்ச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதை களுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்.'' இதைத்தான் இன்று எங்கும் பரவலாகப் பார்க்கிறோம். மக்கள் எப் பொழுதும் ஆசீர்வாதங்களையே நாடுகிறார்களே தவிர, கிரமமான திருவசனப் போதனைமீது நாட்டமே கிடையாது. இந்தக் கடைசி நாட்களில் நம்மைக் குறித்த தேவனது எதிர் பார்ப்புகளும், திருமறையின் அறிவுரைகளும் நமக்குப் பெரிதாய்த் தெரிவதில்லை. பிரசங்கபீடங்களிலும் சபையினர் பாடும் பல்லவிக்கேற்ற ஆட்டம்தான். வசன வியாக்கியா னத்தையல்ல, கதைகளையும் அனுபவங்களையும் கேட்கத் தான் மக்கள் திரளுகிறார்கள். திருவசனம் போதுமான அளவு பிரசங்கிக்கப்படாவிடில், துர்வுபதேசங்கள் தலை விரித்தாடத்தான் செய்யும்.

நமது பிரசங்கபீடங்களிலிருந்து போதுமான ஆரோக்கிய உபதேசம் கொடுக்கப்படாமலிருப்பதற்கு முக்கிய காரணம் பிரசங்கம்பண்ணுகிறவர்களே ஒழுங்காக உட்கார்ந்து வேதத்தைத் தியானிப்பதில்லை. பிரசங்கியாரின் தனித் தியானவேளையில் கோளாறு இருக்குமானால், அவரது பிரசங்கங்களும் அப்படித்தானிருக்கும். வேதத்தை அவசர

அவசரமாய் வாசிப்பதில் ஒரு பயனுமில்லை. ஒவ்வொரு வசனமும் என்ன சொல்லுகிறது என்பதைவிட என்ன பொருள்படுகிறது என்று அறிந்துகொள்வதே காரியம்.

திருமறையானது இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகப் புத்தகம் என்பது எப்பொழுதும் நமது நினைவிலிருக்க வேண்டும். வேதத் தியானத்தைத் தொடங்கும்போதெல்லாம் நாம் ''முதலாவது'' அல்லது ''முந்தி'' அறியவேண்டியது என்னவென்று 2 பேதுரு 1:20,21இல் வாசிக்கிறோம்: ''மறைநூலிலுள்ள எந்த இறைவாக்கும் எவரது சொந்த விளக்கத்திற்கும் உட்பட்டது அல்ல என்பதை நீங்கள் **முதலில்** அறியவேண்டும். தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்ட மனிதர்கள் கடவுள் அருளியதை உரைத்ததே இறை வாக்கு. அது ஒருபோதும் மனித விருப்பத்தால் உண்டானது அல்ல.'' வேதத்தைத் திறக்கும்போதெல்லாம் அது ''கடவுளு டைய'' புத்தகம், ''கடவுளிடமிருந்து'' வந்த புத்தகம் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கவேண்டும். வேதத்திலுள்ள புத்தகங்களை எழுதியவர்கள் மனிதர்கள்தான்; ஆனால் அவர்களை இயக்கியவர் கடவுளே. வேதத்தின் 66 புத்த கங்களும் ஏறத்தாழ 40 ஆசிரியர்களால் எழுதப்பட்டன. இவர் களில் பலர் ஒருவரையொருவர் சந்தித்ததே கிடையாது. ஒரு சில ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே 1000 ஆண்டுகளுக்கும் மேலாகக் கால இடைவெளி இருந்திருக் கிறது. ஆனால் இவர்களைத் தூண்டியவரும், இயக்கிய வரும், அவர்கள் எழுதியபோது அவர்களைக் கண்காணித் தவரும் தேவனே என்பதால் வேதத்திற்குள்ளே ஒன்றுக் கொன்று முரண்பாடு என்று கிடையவே கிடையாது.

ஒரு தெய்வீகப் புத்தகத்தை தெய்வீக உதவியின்றிப் புரிந்துகொள்ளமுடியாது. திருப்பாடகனுடைய உறுதியான எண்ணமும், இடையறாத கதறலும் இதுவாகத்தானிருந்தது: ''உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்'' (சங் 119:18). இந்த வார்த் தைகளை இவ்விதமாய் விளக்கிக் கூறலாம்: ''தேவா, நீர் என்ன சொல்லுகிறீரென்று எனக்குப் புரியவில்லை. எனக்குக் கண் தெரியவில்லையோ என்று எண்ணத்

தோன்றுகிறது. உமது வார்த்தைகளின் உன்னத சத்தியங் களைப் புரிந்துகொள்ளும்படி எனது அகக்கண்களைத் திறக்கமாட்டீரா?'' அதே சங்கீதத்தில் சற்றுப்பின்னரும் இதே ஜெபத்தை அவன் மறுபடியும் ஏறெடுக்கிறான்: வசனம் 125, ''நான் உமது அடியேன்; உமது சாட்சிகளை நான் அறியும்படி, என்னை உணர்வுள்ளவனாக்கும்.'' வேறு வார்த்தைகளில் சொன்னால், ''தேவனே, நான் உமக்கு அடிமை. நான் என்ன செய்யவேண்டுமென்று நீர் விரும்புகிறீரோ, அதை மட்டுமே நான் செய்ய ஆசிக்கிறேன். எனக்கு வேறே விருப்பமில்லை. ஆனால், நான் என்ன செய்யவேண்டுமென்று நீர் விரும்பு கிறீர் என்பது எனக்குச் சரியாகப் புரியவில்லை. எனக்கு உதவமாட்டீரா?'' இந்த இரு வேண்டல்களையும் நான் உற்றுக்கவனித்தபொழுது, இவைகள் வேதாகம ஆசிரியர் களில் ஒருவராலேயே ஏறெடுக்கப்பட்டன என்பதை உணர்ந் தேன். நாம் வேதாகம ஆசிரியர்கள் அல்ல, வாசகர்கள் மட்டுமே. வேதாகம ஆசிரியர்களில் பிரபலமான ஒருவரே இவ்விதம் ஜெபிக்கவேண்டியதிருந்தால் நீங்களும் நானும் எவ்வளவு ஜெபச் சிந்தையோடு வேதத்தின் பக்கங்களைப் புரட்டவேண்டுமென்று பாருங்கள்!

''கண்களைத் திறந்தருளும்'' என்று சங்கீதக்காரன் ஜெபித்ததின் காரணம் தெரியுமா? நமது முதல் பெற்றோரின் வீழ்ச்சியை அடுத்து மனுக்குலம் முழுவதுமே ஓர் ஆன்மீகக் குருட்டுத்தனத்திற்குள் மூழ்கிவிட்டது. 2 கொரிந்தியர் 4:4இல் இது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது: ''இவ்வுலகின் தெய்வம் அவிசுவாசிகளின் அறிவுக்கண் களைக் குருடாக்கிவிட்டது. எனவே அவர்கள் கடவுளின் சாயலாய் விளங்கும் கிறிஸ்துவின் மாட்சி பொருந்திய நற்செய்தியின் ஒளியைக் காணமுடிவதில்லை.'' ஆன்மீக ரீதியில், அடிப்படையாக, ஒவ்வொரு மனிதனும் குருடாகத் தானிருக்கிறான். அவன் கடவுளது முதலாம் தொடுதலைப் பெற்றுக்கொள்ளும்போது, நற்செய்தியின் ஒளியை அவனால் பார்க்கமுடிகிறது (வச 6). தொடர்ந்து அவனைக் கடவுள் தொடும்போது திருமறையின் மற்ற சத்தியங்களை ஒவ் வொன்றாய் அவனுக்கு விளங்கிக்கொள்ளமுடிகிறது. ஆண்டவரது முதல் தொடுதல்தான் நம்மை விசுவாசிகளாக்

கிற்று. அடுத்து நமக்கு அவரது இரண்டாம் தொடுதல், மூன்றாம் தொடுதல் என்று நெடுகவே கிடைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஒவ்வொருமுறை வேதத்தை நாம் திறக்கும்போதும் ஆண்டவர் நமது கண்களைத் தொடவேண்டும், திறக்கவேண்டும்.

படித்த மேதை போல திருமறையைத் திறக்கிறவர்களை ஆண்டவர் மதிப்பதேயில்லை. லூக்கா 10ஆம் அத்தியாயத்தில் சுவாரஸ்யமானதொரு சம்பவம் உண்டு. இயேசுவானவர் 70 சீடரைத் தெரிந்தெடுத்து, அவர்களை இரண்டிரண்டு பேராக தாம் செல்லப்போகும் கிராமங்களுக்கு அனுப்பினார். அவர்கள் புறப்பட்டுப்போய் இறையரசைக் குறித்துப் பிரசங்கித்தார்கள். தங்களது முதல் ஊழியச் சுற்று முடிந்ததும் மிகுந்த பரவசத்துடன் ஆண்டவரிடம் திரும்பிவந்தனர். அவர்கள் துள்ளிக்கொண்டும் குதித்துக்கொண்டும் ஆண்டவரிடம் சொன்னது: "உமது நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன" (வச 17). இயேசு மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தார். "அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து, பிதாவே, விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் ஆண்டவரே, இவைகளை நீர் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைந்து, **குழந்தைகளுக்கு** வெளிப்படுத்தினீர். ஆம், பிதாவே, இப்படிச் செய்வது உமது திருவுளத்திற்குப் பிரியமாயிருந்தது" (வச 21). ஆண்டவரது சீடர்களில் பெரும்பாலானோர் படியாதவர்கள், பயிலாதவர்கள்! ஆனாலும் உயரிய ஆன்மீகச் சத்தியங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ளவும், புரிந்துகொள்ளவும் முடிந்தது. கற்றுத் தேர்ந்தவர்களுக்குக்கூட விளங்காதது குழந்தைகள் போன்ற சாதாரண மக்களாகிய இச்சீடர்களுக்கு விளங்கிவிட்டதே என்பதில்தான் இயேசு குதூகலித்தார்.

இந்தச் சம்பவம் நமக்கு முக்கியமான படிப்பினை ஒன்றைத் தருகிறது. நாம் கடவுளுக்கடுத்த காரியங்களை அணுகும்போதும், திருமறையைத் திறக்கும்போதும் நமக்குக் குழந்தையுள்ளம் இருக்கவேண்டும். குழந்தையுள்ளம் என்றால் என்ன தெரியுமா? இதற்கு எதிர்மறையானது தான், "எல்லாம் எனக்குத் தெரியும்" எனும் மனப்பான்மை.

சிறுபிள்ளைகள் கேள்வி கேட்டுக்கொண்டயிருப்பார்கள். ஏனெனில் அவர்களுக்குத் தற்பெருமை கிடையாது. அவர்களுக்கிருப்பது அறியாமை, திறந்தமனது. தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பவர்கள்தான் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளத் தயங்குவார்கள். பிரியமானவர்களே, திருமறையைத் திறக்கும்போதெல்லாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆவலே உங்களுக்கு மேலோங்கி நிற்கட்டும். பிறருக்குக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதோ, ஏற்கனவே உங்களுக்குத் தெரிந்ததை வசனத்திற்குள் புகுத்தவேண்டுமென்பதோ உங்களது நோக்கமாயிருக்கக்கூடாது. மறைநூலின் புனிதமான பக்கங்களிலிருந்து சரியான செய்தியை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் பயபக்தியான அணுகுமுறை அத்தியாவசியம்.

கடவுளுடைய வாயிலிருந்தே இதோ நமக்கு ஒரு சவால் வருகிறது: எரேமியா 6:10, "நான் யாரிடம் பேசுவேன்? யாருக்கு எச்சரிப்பு விடுப்பேன்? யார் செவிகொடுப்பார்? அவர்கள் காதுகள் விருத்தசேதனம் பண்ணப்படவில்லை; அவர்களால் செவிகொடுக்கமுடியாது. ஆண்டவரின் வாக்கு அவர்களுக்குப் பழிச்சொல் ஆயிற்று; அவர்கள் அதில் இன்பம் காண்பதில்லை." அவர்களது "காதுகள்" விருத்தசேதனம் பண்ணப்படவில்லையென்று ஏன் ஆண்டவர் சொல்லுகிறார் தெரியுமா? யாரோ ஒருவன் இன்னொருவனுக்குத் தன்னை அடிமையாக, வேலைக்காரனாக, வாழ்நாள் முழுவதும் சேவை செய்வதற்கு அர்ப்பணிப்பானேயானால், அன்றிருந்த எபிரெயக் கலாச்சாரத்தின்படி, அவன் காதைக் கம்பியினால் குத்துவார்கள் (யாத் 21:6). இந்த மக்களுக்குக் கீழ்ப்படிதலின் மனப்பான்மையில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகவே அவர்கள் "காதுகள்" விருத்தசேதனம்பண்ணப்படவில்லை என்றார் ஆண்டவர்.

இங்கு நாம் தியானித்துக்கொண்டிருக்கும் இச்சத்தியம் இன்னொரு விதமாக ஏசாயா 66:1,2இல் வரையப்பட்டுள்ளது: "விண்ணகம் என் அரியணை; மண்ணகம் என் கால்மணை. அவ்வாறிருக்க, எத்தகைய கோவிலை நீங்கள் எனக்காகக் கட்டவிருக்கிறீர்கள்? இவை அனைத்தையும்

என் கைகளே உண்டாக்கின; இவையாவும் என்னால் உருவாகின என்கிறார் ஆண்டவர். ஆனாலும் எளிமையுடன் உள்ளம் வருந்தி, என் **வசனத்திற்கு** நடுங்குகிறவனையே நான் கண்ணோக்குவேன்.'' நாம் பிரமாண்டமாகச் செய் கிறோமென்று நினைப்பது எதுவும் ஆண்டவரை வசீகரித்து விடாது. எளிய மனதுடன், பயபக்தியாய் அவரது வார்த் தைக்குமுன் நடுக்கத்துடன் நிற்பவனே ஆண்டவரைக் கவருவான். அன்புடனும், கருணையுடனும், இரக்கத்துட னும் கர்த்தரின் கண்கள் உங்கள்பால் திரும்பவேண்டு மானால், அவரது வசனத்திற்குமுன் அடிபணியுங்கள். வேறு வழியே இல்லை. அறிவுச் செருக்கின் விளைவு எப்பொழு துமே ஆன்மீக மதியீனம்தான்.

சீலோவாம் குளத்தினருகே இயேசுவானவர் ஒரு குருடனைத் தொட்டுச் சுகமாக்கினாரே, அந்தச் சம்பவத்தில் சில முக்கியமான கருத்துக்களை அவர் வெளிப்படுத்தினார். ''அப்பொழுது இயேசு காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும், நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்'' (யோ 9:39). அதாவது, தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று அகம்பாவ மாய் நினைத்துக்கொண்டிருப்பவர்கள் அறியாதவர்களாக, குருடர்களாகவே இருப்பார்களாம். இதை மனதில் வைத்து தான், வேதத்தைக் கூடியமட்டும் முழங்காலில் நின்றே தியானியுங்களென்று இளம் விசுவாசிகளுக்கு அறிவுறுத்து கிறேன். இது தேவனுக்குமுன்னர் பயபக்தியைக் காட்டும் ஒரு பாவனை. வேதத்தை நாம் திறக்கும்போது, தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், இராஜாதி இராஜாவுமான வர் நம்மிடம் பேசும்படி எதிர்பார்க்கிறோமல்லவா ? இப்படிப் பட்டவருக்கு முன்பாக எவ்வளவு பயபக்தியாயிருக்க வேண்டும்!

தூயாவியானவர்தான் திருமறையின் ஆக்கியோன். ஆக்கியோனின் உதவி அவ்வளவாய் வாக்களிக்கப்பட்டி ருக்கும்போது அவரது உதவியை நாடாது அவரது புத்த கத்தை வாசிக்க முயல்வது எவ்வளவு மடமை! ஆன்மீகக்

காரியங்களை ஆன்மீகமானவைகளோடு ஒப்புமைப்படுத்தி நமக்குப் போதிப்பவர் ஆவியானவரே (1 கொரி 2:13). இல்லையேல், நாம் திருவசனத்தைத் திரித்துக்கொண்டும் புரட்டிக்கொண்டும்தானிருப்போம் (2 பேது 3:16). வேதப் போதகர்களைவிட வேதப் புரட்டர்கள்தான் இன்று அதிகம்! திறந்த மனதுடன், ஆவியானவரது விரிக்கப்பட்ட குடை யின்கீழ் அமர்ந்து, வேதத்தைத் திறந்தால்தான் விண்ணகம் நமக்காகத் திறக்கப்படும். ''தம்மிடம் அன்புகொள்ளு கிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண் ணுக்குப் புலப்படவில்லை, செவிக்கு எட்டவில்லை, மனித உள்ளமும் அதை அறியவில்லை, இதைக் கடவுளோ தூய ஆவியானவரின் வழியாக நமக்கு வெளிப்படுத்தினார்'' (1 கொரி 2:9,10).

''ஆண்டவரே, உமது திருவார்த்தையிலுள்ள பரம இரகசியங்களை நான் புரிந்துகொள்ளும்படி எனது அகக் கண்களைத் திறந்துவிடும்'' என்று வேதப் புத்தகத்தைத் திறக்கும்போதெல்லாம் வேண்டுங்கள். தியானித்து முடித்த வுடன், ''ஆண்டவரே, இப்பொழுது உமது ஆவியானவர் மூலம் உமது வசனத்திலிருந்து நான் பெற்றுக்கொண்ட வெளிப்பாடுகளுக்காக உம்மைத் துதிக்கிறேன்'' என்று சொல்லுங்கள். இவ்வித மனப்பான்மையே கடவுளுக்குப் பிடிக்கும். அவர் தமது வெளிப்பாடுகளை உங்கள் உள்ளத் தில் நதியைப்போல் பாய்ந்தோடச் செய்வார். அவரது வழிகளைப் புரிந்துகொள்வதில் நீங்கள் தேறிக்கொண்டே யிருப்பீர்கள்!

5

வசனச் சூழமைவை மறந்துவிடக்கூடாது.

"A text out of context is a pretext!" அதாவது, இடம் பொருள் காலத்தைக் கவனியாமல் ஒரு வசனத்தை வியாக்கியானித்தால் அது குழப்பமே. இதை விளக்க 2 தீமோத்தேயு 2:15ஐக் கவனியுங்கள்: "நீ வெட்கப்படாத வேலைக்காரனாகவும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாகவும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படிக் கவனமாயிரு." நிதானமாய்ப் "பகுத்து" என்றால், சரியாய் "வெட்டி" என்று பொருள். இது கூடாரத் தொழிலில் பயன்படுத்தப்படும் பழக்கச் சொல்லாகும். பவுல் ஒரு கூடாரத் தொழிலாளி என்பதை நாம் அறிவோம். அவனது நாட்களில் சிறுசிறு தோல் துண்டுகளைச் சேர்த்துக் கூடாரங்கள் தைக்கப்பட்டன. இந்தத் தோல் துண்டுகள் வடிவாக "வெட்டப்படாவிட்டால்," அவைகள் இணைக்கப்படுகிறபோதும், இணைத்து விரிக்கப்படுகின்றபோதும், விரித்து உயர்த்தப்படுகின்றபோதும் அங்குமிங்கும் இழுத்துக்கொண்டு பார்க்க சகிக்காததாயிருக்கும். கூடாரத்தைச் செய்யச்சொன்ன வாடிக்கையாளர் வந்து அதைப் பார்க்கும்போது, கூடாரத் தொழிலாளி ("வேலைக்காரன்") வெட்கி நாணவேண்டியதிருக்குமல்லவா ? இந்த எடுத்துக்காட்டைத்தான் திருவசனத்தைப் பகுக்கும் காரியத்தில் காட்டவேண்டிய கவனத்திற்கு இணையாகப் பவுல் குறிப்பிடுகிறான்.

இப்பொழுதெல்லாம் நாம் ஆயத்த உடைகளை வாங்கி விடுகிறோம். சில ஆண்டுகளுக்குமுன் துணி எடுத்துத்

தான் தைக்கக் கொடுப்போம். டெய்லரிடம் அந்த ஆடையை வாங்கி அணிந்துபார்க்கும்போது, ஒன்று இறுக்கமாயிருக்கும், அல்லது தொளதொளவென்றிருக்கும்; ஒன்று குட்டையாயிருக்கும், அல்லது அங்கி போலிருக்கும். தையல்காரரிடம் நாம் அதைச் சொன்னால், அவர் எளிதில் ஒத்துக்கொள்ளவேமாட்டார். ஆனால் நாம் விடாமல் சொல்லிக்கொண்டேயிருந்தால், அவர், "ரொம்ப சாரிங்க, கட்டிங்ல எங்கேயோ பிழயாயிடுச்சுங்க" என்று தலையைச் சொரிந்து கொண்டே சொல்லுவார். திருவசனத்தை சரியாகப் பகுத்துப் போதிக்காத எந்தப் பிரசங்கியும் இந்தத் தையல்காரனைப் போல்தான் வெட்கப்பட வேண்டியதிருக்கும் என்ற கருத்தைத்தான் பவுல் இங்கு கொண்டுவருகிறார்.

திருமறையானது ஒரு பழைய புத்தகம் மட்டுமல்ல, அது ஒரு **புராதனப்** புத்தகம், தொன்மையான புத்தகம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பழைய ஏற்பாட்டின் முதல் 5 புத்தகங்கள் கிறிஸ்துவுக்குமுன் 1400 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது நாம் வாழும் இக்காலத்திற்கு 3400 ஆண்டுகளுக்கு முன்னர், எழுதப்பட்டவை. வெளிப்படுத்துதல் புத்தகம் கிறிஸ்துவுக்குப்பின் 90 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது நாம் வாழும் இக்காலத்திற்கு 1900 ஆண்டுகளுக்கு முன்னர், எழுதப்பட்டது. இதைக் கூட்டிக் கழித்துச் சராசரியாய்ப் பார்த்தால், நாம் வாழும் காலத்திற்கும் வேதம் எழுதப்பட்ட காலத்திற்கும் இடையே சராசரியாக 3000 ஆண்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு தலைமுறைக்கும் மொழிநடையும் கலாச்சாரமும் எவ்வளவு மாறுகின்றன ! வேதத்தை விளக்கவும், வியாக்கியானிக்கவும் முற்படும் போது இக்காரியத்தை மனதிற்கொள்ளவேண்டும்.

சூழமைவுக்கேற்ப வசனங்களைத் தியானிப்பதற்கு உதவியாக நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டிய 5 கேள்விகளை இங்கு தருகிறேன்—

அ) அதைச் சொன்னது யார் ?

“கடவுள் அவனோடிராவிடில் நீர் செய்கிற இவ்வித அற்புதங்களை ஒருவனாலும் செய்யமுடியாது” என்று இயேசுவானவரிடம் நிக்கோதேமு புகழ்பாடினான் (யோ 3:2). அற்புதங்கள் மட்டும் எதையுமே நிரூபிப்பதில்லை. நிக்கோதேமு சொன்னது பாதி சரி, பாதி தவறு. மோசேயைப்போல எகிப்துநாட்டு மந்திரவாதிகள் அற்புதம் செய்யவில்லையா ? ஒருவன் அற்புதம் செய்கிறான் என்பதால் கடவுள்தான் அவனோடிருந்து செயல்படுகிறவர் என்று சொல்லிவிட முடியாது. சாதாரண அற்புதங்களல்ல, அசாதாரண அடையாளங்களைக் கள்ளத்தீர்க்கர்கள் காட்டுவார்களென்று இயேசு முன்னெச்சரிக்கவில்லையா ? (மத் 24:24). நிக்கொதேமு யூத மார்க்கத்தில் ஒரு போதகனாயிருந்தும் ஆன்மீகக் காரியங்களைக் குறித்த தெளிவு அவனுக்கில்லை. “நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா” என்று இயேசுதாமே அவனிடம் நேரடியாய்க் கேட்டுவிட்டார் (யோ 3:10). எனவே பிரியமானவர்களே, ஒரு வசனத்தைத் தியானிக்கும்போதோ வியாக்கியானிக்கும்போதோ அதைச் சொன்னது யார் என்ற பின்னணியை நினைவிலிருத்திக்கொள்ளவேண்டும்.

ஆ) அது யாருக்கு, யாரைக்குறித்துச் சொல்லப்பட்டது ?

இது பெரும்பாலும் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களைப் பற்றியது. “அவனுடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை” என்று சங்கீதம் 34:20இல் வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தத்தை நாம் உரிமைபாராட்டலாமா ? பொதுவாக, நாம் எங்கு சென்றாலும், ஆண்டவரது பாதுகாப்பை எதிர்பார்க்கலாம், உரிமைபாராட்டிவேண்டலாம். ஆனால் இந்தக் குறிப்பிட்ட வாக்கு மேசியாவானவருக்கே உரியது. அவர் சிலுவையிலறையப்பட்டபோது, அவர் இறந்துவிட்டார் என்று கண்டறிந்த சேவகர்கள் அவரது காலெலும்புகளை வழக்கப்படி முறிக்கவில்லை (யோ

19:33). வேதவாக்கியம் (சங் 34:20) நிறைவேறும்படி இப்படி நடந்தது என்று வாசிக்கிறோம். ஆனால் அன்று கிறிஸ்துவோடு பரதீசுக்குச் செல்லவிருந்த, பாவ மன்னிப்படைந்த, அந்தக் கள்ளனின் எலும்புகளும் முறிக்கப்பட்டனவே ! சாலை விபத்துக்களில் எத்தனை தேவ ஊழியர்கள் எலும்பு முறிவுக்குள்ளாகின்றனர். “எனக்கு எலும்பு முறிவு எதுவும் இதுவரை ஏற்படவில்லை, பரவாயில்லையே” என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். 1996இல் எனக்கு இருதய அறுவை சிகிச்சை நடந்தபோது, ஐயகோ, எத்தனை விலா எலும்புகளை ரம்பம் வைத்து அறுத்துவிட்டனர் ! கொடூரமாய்க் கொல்லப்பட்ட இரத்தசாட்சிகளைக் குறித்துச் சொல்ல வேண்டுமோ ? ஆம், வேதத்திலுள்ள திருவாக்குகள் எல்லாம் எல்லாருக்கும் பொருந்தும் என்று எடுக்கமுடியாது. “யாருக்கு... யாரைக்குறித்து” அது சொல்லப்பட்டதென்று கவனிப்பது அவசியம்.

இ) அது எப்பொழுது சொல்லப்பட்டது ?

இறையரசின் நற்செய்தியை அறிவிக்கும்படி ஆண்டவர் தமது 12 சீடரை அனுப்பியபோது அவர்களிடம் சொல்லிய வார்த்தைகள்: மத்தேயு 10:9,10, “பொன், வெள்ளி, செப்புக் காசு எதையும் உங்கள் இடைக்கச்சைகளில் வைத்துக் கொள்ளவேண்டாம். பயணத்திற்காகப் பையோ, இரண்டு அங்கிகளோ, மிதியடிகளோ, கைத்தடியோ எடுத்துக் கொண்டுபோகவேண்டாம். ஏனெனில் வேலையாள் தம் உணவுக்கு உரிமையுடையவரே.” புறவினத்தார் நடுவில் அல்ல, “இஸ்ரவேலரிடத்தில்” அனுப்பும்போதுதான் இயேசு தமது சீடருக்கு இப்படிச் சொன்னார். அவர் அவர்களை அனுப்புகையில் சொன்னது: “பிறவினத்தாரின் எப்பகுதிக்கும் செல்லவேண்டாம். மாறாக, வழிதவறிப்போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள்” (வச 5,6). கடவுளுடைய ஊழியன் ஒருவன் தங்களிடம் வரும்போது அவரை எப்படிப் பராமரிக்கவேண்டுமென்பது இஸ்ரவேல் மக்களுக்குத் தெரிந்த காரியம். பின்னர், ஆண்டவர் இதே

சீடர்களைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா ? “நான் உங்களைப் பணப்பையோ வேறு பையோ மிதியடியோ எதுவுமில்லாமல் அனுப்பியபோது, உங்களுக்கு ஏதாவது குறை இருந்ததா என்று கேட்டார். அவர்கள், ஒரு குறையும் இருந்ததில்லை என்றனர். அவர் அவர்களிடம், **ஆனால் இப்பொழுது** பணப்பை உடையவர் அதை எடுத்துக்கொள் ளட்டும்; வேறு பை உடையவரும் அவ்வாறே செய்யட்டும் என்றார்” (லூக் 22:35,36). ஒரு காரியம் “எப்பொழுது” சொல்லப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டியது எவ் வளவு அவசியம் பாருங்கள்!

ஈ) அது எங்கு சொல்லப்பட்டது ?

இது கலாச்சாரத்தைப் பற்றியது. “பரிசுத்த முத்தத் தோடே ஒருவரையொருவர் வாழ்த்துங்கள்” என்று புதிய ஏற்பாட்டு நிருபங்களில் பல முடிவடைகின்றன (ரோ 16:16; 1 கொரி 16:20). மத்திய கிழக்கு நாடுகளிலும் மேற்கத்திய நாடுகளிலுமுள்ள பல பகுதிகளில் இப்பழக்கம் இன்னும் இருந்துவருகிறது. ஆனால் இப்பழக்கம் இந்தியாவிற்கு ஒவ்வாது. நமது நாட்டில் ஆண்களும் பெண்களும் ஒரு வரோடொருவர் கைகுலுக்குவதைக்கூட சிலர் முறைத்துப் பார்ப்பார்கள்! இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பெண்கள் பலர் தங்கள் கிராமங்கள், வீதிகளுக்குள் வெளியிடத்து ஆண்கள் வந்துவிட்டாலே உடனே முகத்தை மூடிக்கொள் வார்கள். திருமறையிலுள்ள வசனப் பகுதிகளை அந்தந்த கலாச்சாரப் பின்னணியை மனதிற்கொண்டவர்களாய் வியாக்கியானிக்கவேண்டும். அரசியல் கலாச்சாரம், சமூகக் கலாச்சாரம், மார்க்கக் கலாச்சாரம், நிதித்துறைக் கலாச் சாரம், இப்படியெல்லாம் பலவாறு உண்டு. வேதத்திலுள்ள சில அறிவுரைகள் மற்றும் பழக்க வழக்கங்களின் கலாச்சாரப் பின்னணியைக் கவனியாது விட்டுவிட்டால் அவ்வசனங் களுக்கு நாம் கொடுக்கும் அர்த்தம் அர்த்தமற்றதாகிவிடும்.

உ) அது ஏன் சொல்லப்பட்டது ?

பிலிப்பி நகர் விசுவாசிகளுக்கு எழுதும்போது, பவுல் அப்போஸ்தலன், “நமது குடியுரிமையோ பரலோகத்தில்

இருக்கிறது; அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்” என்று குறிப் பிட்டான் (பிலி 3:20). அப்படியானால், இந்தியாவிலுள்ள கிறிஸ்தவர்கள், “விண்ணகம்தான் எங்கள் தாய்நாடு, இந்தியா அல்ல” என்று சொல்லலாமா ? பவுல் ஏன் அப்படி எழுதினான் தெரியுமா ? இத்தாலியிலுள்ள ரோம் நகரில் பிலிப்பி பட்டணம் என்பது அகதிகளின் முகாமாயிருந்தது. இந்தியாவில் எத்தனையோ இலங்கை அகதிகள் முகாம்கள் இருக்கின்றன அல்லவா, அப்படித்தான். இந்த இலங்கை அகதிகளுக்கு எவ்வளவோ வசதிகள் கொடுக்கப்பட் டாலும் வாக்குரிமை கிடையாது. பிலிப்பியுள்ள விசுவாசிகள் தாங்கள் பரதேசிகளாகத்தானே இருக்கிறார்களென்று சோர்ந்துபோயிருந்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்து வதற்காகத்தான் பவுல் இப்படி எழுதினான்: “கவலைப்படா தீர்கள்; நமது குடியுரிமை மேலே இருக்கிறது; அங்கிருந்து வரப்போகும் நமதாண்டவர் நமது உடல்களையெல்லாம் மறுரூபப்படுத்தி நம்மை விண்ணகத்திற்கே எடுத்துக் கொண்டுபோய்விடுவார். இங்கே திண்டாட்டம், அங்கே கொண்டாட்டம்!” இந்த வசனத்தைச் சரியாகப் புரியாத ஒரு வகையான கிறிஸ்தவர்கள் இந்திய நாட்டுக்கொடிக்கு கொடி வணக்கம் (Salute) செய்ய மறுத்துவிட்டார்கள். “எங்கள் குடியுரிமை இந்தியாவில் இல்லை, சொர்க்கத்தில்தான் இருக்கிறது” என்று வாதாடினார்கள். இது பாராளுமன் றத்தில் பெரும் சர்ச்சைக்குரிய காரியமாயிற்று. அப்பொழுது இந்தியாவிலுள்ள முக்கிய கிறிஸ்தவத் தலைவர்கள் பலர் குடியரசுத் தலைவரைச் சந்தித்துச் சொன்னது: “கொடி வணக்கத்திற்கு மறுப்பு தெரிவித்தவர்கள் கிறிஸ்தவர்களே அல்ல; அவர்கள் ஓர் ஓரக்கொள்கையினர். அவர்களுக்கும் இந்தியாவிலுள்ள முக்கிய கிறிஸ்தவ சபைகளுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.” பிரியமானவர்களே, கிறிஸ்தவர் களாகிய நாம் தேசியவாதிகளாய் (nationalistic) இல்லாமல் இருக்கலாம்; ஆனால் நாட்டுப்பற்று (patriotic) உள்ளவர் களாய் இருக்க வேண்டும். ஆம், இவ்விதம் கலாச்சாரப் பின்னணியை மறந்துவிட்டால், நமது வேத விளக்கங்கள்

தேவையற்ற சமூகப்பிரச்னைகளையும் உருவாக்கிவிடும். மட்டுமல்ல, அது இறையரசின் விரிவாக்கப்பணிகளுக்கும் முட்டுக்கட்டையாகிவிடும்.

“யார்” சொன்னது, “யாருக்கு” சொன்னது ஆகிய கேள்விகள் நபர்களைச் (persons) சார்ந்தவை; “எப்பொழுது” சொல்லப்பட்டது என்பது காலத்தைச் (period) சார்ந்தது; “எங்கு” சொல்லப்பட்டது என்பது இடத்தைச் (place) சார்ந்தது; “ஏன்” சொல்லப்பட்டது என்பது நோக்கத்தைச் (purpose) சார்ந்தது.

இதுபோன்ற தகவல்கள், விபரங்களெல்லாம் எங்கு கிடைக்குமென்ற கேள்வி எழலாம். கடினமானதொரு வசனத்தை நீங்கள் விளங்கிக்கொள்ள விரும்பினால், அதற்கு முன்னரும் பின்னரும் வருகிற ஒரு சில வசனங்களை வாசித்துப்பாருங்கள். சில சமயங்களில் அந்த முழு அத்தியாயத்தையுமே வாசித்துப்பார்ப்பது உதவியாயிருக்கும். இன்னும் விளங்கவில்லையென்றால் ஓரிரு தடவை அந்த முழுப் புத்தகத்தையும் வாசித்துப்பாருங்கள். ஆராய்ச்சி வேதாகமங்களைத் (Study Bibles) தாராளமாய்ப் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு ஆராய்ச்சி வேதத்திலும், 66 புத்தகங்களுக்கும், அந்தந்த புத்தகத்தின் துவக்கத்தில் புத்தக அறிமுகம் (Book Introduction) என்று இருக்கும். இதைக் கவனமாய்ப் படித்தால் அப்புத்தகத்தின் ஆசிரியர், எழுதப்பட்ட காலக்கட்டம், யாருக்காக எழுதப்பட்டது போன்ற தகவல்களெல்லாம் கிடைத்துவிடும். வேதத்தை விளக்குவதற்கு இவைதான் திறவுகோல் எனலாம். வீட்டுச்சாவி இல்லாவிட்டால் வீட்டிற்குள் எப்படி நுழைவது ? ஜன்னல் கதவுகளை உடைக்கவேண்டியதுதான்! அது எப்படியிருக்கும் ? பின்னணி விபரங்களுடன் வேதத்தை ஆராய்வது எவ்வளவு பரவசமாகவும் பக்திவிருத்தியாகவும் இருக்கும் தெரியுமா ? நேரம் போவதே தெரியாது. வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதைத் தியானிக்கிற மனிதனின் “பாக்கியம்” என்பது அதுதான் (சங் 1).

6

வேதத்தைவிட அனுபவங்களுக்கு முக்கியத்துவம் தரக்கூடாது.

நாம் பெற்றுக்கொள்ளுகிற பல்வேறு ஆன்மீக அனுபவங்களுக்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். ஆனால் நமது அனுபவங்களை நிரூபிப்பதற்காக வேதத்திலே வசனங்களைத் தேடிக்கொண்டிருக்கக்கூடாது. மாறாக, நமது அனுபவங்களை வேதவசன வெளிச்சத்தில் சோதித்துப் பார்க்கவேண்டும். நமது அனுபவங்கள் சரிதானா என்று பார்ப்பதற்கான உரைகல் திருமறையே. எந்த அனுபவத்தின் அடிப்படையிலும் ஓர் உபதேசத்தை நிலைநிறுத்த முயற்சிக்காமல், பளிங்குபோல் தெளிவாக வேதம் போதிக்கிற, ஆமோதிக்கிற, அனுபவங்களையே ஊக்குவிக்கவேண்டும். அனுபவத்திலிருந்து சத்தியம் அல்ல, சத்தியத்திலிருந்துதான் அனுபவம்; இந்த வரிசை ஒருபோதும் மாறிவிடக்கூடாது. இந்த அனுபவம் நன்றாயிருக்கிறதே, பரவசமாயிருக்கிறதே என்று அதின் அடிப்படையில் உபதேசிக்கத் துவங்கிவிடாமல், வேதம் போதிக்கும் அனுபவங்களையே நாடவேண்டும்; அவைகளிலேயே திருப்தியடைய வேண்டும்.

ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை மாம்சம், அதாவது மனிதவுடல், ஆனது. ஆம், வார்த்தைதான் மனிதவுடல் ஆகவேண்டுமே தவிர, மனிதவுடல் வார்த்தையாகிவிடக்கூடாது! (யோ 1:1,14). மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்; ஆவியினால் பிறப்பதோ ஆவியாயிருக்கும் (யோ 3:6). “நான் உங்களுக்குச் சொல்லுகிற **வசனங்கள்** ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன” என்று இயேசு அழுத்திச் சொன்னார் (யோ 6:63). அத்துடன் அவர்

சொன்னது: ‘‘ஆவியே உயிர்ப்பிக்கிறது; மாம்சமோ ஒன்றுக்கும் உதவாது.’’ இவ்வுண்மையை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இதே காரியத்தை அப்போஸ்தலன் பேதுரு எப்படி விளக்கினான் என்று பாருங்கள்: 1 பேதுரு 1:24, ‘‘மானிடர் அனைவரும் புல்லைப் போன்றவர்; அவர்களது மேன்மையெல்லாம் வயல்வெளிப் பூவைப் போன்றது. புல் உலர்ந்துவிடும்; பூ வதங்கிவிடும். நமது ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைநிற்கும்.’’ எனவே, பிரியமானவர்களே, அனுபவத்திலிருந்து உபதேசத்தைக் கொண்டுவராமல், எல்லா அனுபவங்களையும் திருவசனமாகிய உரைகல்லில் உரசிப்பாருங்கள் என்று மறுபடியும் கூறுகிறேன்.

இந்த முக்கியமான சட்டத்தை விளக்குவதற்காக வேதத்திலிருந்து சில கருகலான எடுத்துக்காட்டுகளை உங்கள்முன் வைக்கிறேன்—

2 பேதுரு 1:16−21இல் பேதுரு மறுரூபமலையில் பெற்ற அனுபவத்தை அறிவிக்கிறான். இயேசுவானவர் மறுரூபமானபோது இன்னும் இரு சீடர்களோடு பேதுரு அந்த மலையில் இருந்தான். அவன் எழுதியது: ‘‘நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவரது மாட்சிமையைக் கண்ணாரக் கண்டவர்களாகவே, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்... அவரோடு கூட நாங்கள் புனித மலையில் இருக்கும்போது, விண்ணிலிருந்து வந்த அந்தக் குரலொலியை நாங்களே கேட்டோம்!’’ என்னே அனுபவம் இது! இவ்வித அனுபவம் நம்மில் எவருக்கும் கிடைத்ததுண்டோ? ஆனாலும், இதைத் தொடர்ந்து பேதுரு என்ன எழுதுகிறானென்று கவனியுங்கள்: ‘‘**அதிக உறுதியான** தீர்க்கதரிசன **வசனமும்** நமக்குண்டு’’ (வச 19). இந்த வசனம்தான் ‘‘இருண்ட இடத்தில் ஒளிரும் விளக்கு’’ என்கிறான். ஆம், நமக்கும் நிசமாகவே பரவசமான சில அனுபவங்கள் கிடைத்திருக்கலாம்; ஆனால் அவைகளில் எதுவுமே நமக்கு வழிகாட்டியாய் அமைந்து

விடமுடியாது. ‘‘இருண்ட’’ இவ்வுலகிலே ‘‘அதிக உறுதியான,’’ சற்றும் மாறாத, திருவசனமே ‘‘விடிவெள்ளியாகிய’’ இயேசு கிறிஸ்து திரும்பிவரும்வரை நம்மை வழிநடத்திச் செல்லவேண்டும்!

அனுபவங்களிலிருந்து உபதேசத்தை வரையறுக்காமல், திருவசனத்தின் தெளிவான உபதேசத்தைக் கொண்டுதான் அனுபவங்களைச் சோதித்துப்பார்க்கவேண்டும் என்பது பவுலின் வாழ்க்கையிலிருந்தும் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. 2 கொரிந்தியர் 12:1−4இல் மூன்றாம் வானம்வரை எடுத்துக்கொள்ளப்பட்ட ஒரு மனிதனைக் குறித்துப் பவுல் பேசுகிறான். அந்த மனிதன் யாரென்று பவுல் நேரடியாகக் குறிப்பிடாவிடினும், அது பவுல்தான் என்று நாம் தயங்காமல் கூறலாம். தனது அனுபவத்தைக் கூறும் இவ்வேதப்பகுதியில் மூன்று தடவை அவன் ‘‘நான் அறியேன்’’ என்கிறான். ஆனால், சுவிஷேத்தை உபதேசமாக அறிவிக்கும்போதோ அவனது பாணியும் தொனியும் எப்படியிருக்கிறதென்று கவனியுங்கள். எடுத்துக்காட்டாக, கலாத்தியர் 1:11,12ஐப் பாருங்கள்: ‘‘சகோதரரே, உங்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதரிடமிருந்து வந்ததல்ல, எந்த மனிதரிடமிருந்தும் நான் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வாயிலாகவே அது எனக்குக் கிடைத்தது.’’ 2 கொரிந்தியர் 12இல் தனது ‘‘அனுபவத்தைச்’’ சொல்லுகிற விதத்திற்கும், கலாத்தியர் 1இல் கிறிஸ்துவின் ‘‘சுவிசேஷத்தைப்பற்றிப்’’ பேசுகிற விதத்திற்கும் இடையேயுள்ள அழுத்த வேறுபாட்டினை உங்களால் புரிந்துகொள்ளமுடிகிறதா? திருவசனத்தின் தெளிவான உபதேசத்தைப் பவுல் ஓங்கியடித்துப் பேசும் பாணி, அவன் தனது அனுபவங்களைச் சொல்லும்போது காணப்படவில்லை பாருங்கள்!

திருவசனத்தின் சத்தியத்திற்கு முன்பாகத்தான் அனுபவங்கள் தலைவணங்கவேண்டுமே தவிர மாற்றி அல்ல

என்பது பழைய ஏற்பாட்டிலுள்ள ஒரு பகுதியிலும் விளக்கப் பட்டுள்ளது. எரேமியா 23:28,29, ‘‘சொப்பனம் கண்ட தீர்க்கன் சொப்பனத்தை விவரிக்கட்டும்; என் வார்த் தையைத் தன்னிடம் கொண்டிருப்பவனோ என் வார்த் தையை உண்மையாய் எடுத்துரைக்கட்டும். கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம் ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.’’ ஆம், கதிராகிய திருவசனத்தோடு ஒப்பிடும்போது சொப்ப னங்கள் தரிசனங்கள் எல்லாம் பதர்தான் ! தொடாந்து, அதே வசனப்பகுதியில் ஆண்டவர் விடும் சவாலைக் கேளுங்கள்: ‘‘என் வார்த்தை அக்கினியைப் போலவும், பாறையை நொறுக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறது அல்லவா ?’’ (வச 29). தேவன்தாமே நமது ஆன்மீக அனுபவங்களுக்கும் எழுதப்பட்ட தமது வார்த்தைக்கும் இடையேயுள்ள வேறு பாட்டை எவ்வளவு ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டுகிறார் பாருங்கள் !

தமது காலத்திலிருந்த கண்மூடித்தனமான பாரம்பரியங் களுக்கு எதிராகக் குரல் கொடுத்ததே நமதாண்டவர் சிலுவையிலறையப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணம். எடுத்துக்காட்டாக, மாற்கு 7:8−13இல் ஒரு பாரம்பரியத்தை அவர் கண்டித்ததைக் காணலாம். பெற்றோரின் வயதான காலத்தில் அவர்களைப் பிள்ளைகள் ஆதரிக்கவேண்டும். அக்கால மார்க்கத் தலைவர்களோ இதைத் திரித்து ஒரு தந்திரத்தைப் புகுத்தினார்கள். தங்கள் பெற்றோர் இன்னும் 10 அல்லது 20 ஆண்டுகள் உயிரோடிருந்தால் எவ்வளவு பணம் கொடுக்கவேண்டியதிருக்குமென்று பிள்ளைகளை மார்க்கத்தலைவர்கள் கணக்கிடச்சொன்னார்கள். அந்தப் பணத்தை ஆலயத்திற்கென்று நேர்ந்துகொள்ளும்படிப் பிள்ளைகளுக்கு ஆலோசனை சொன்னார்கள். இதைக் ‘‘கொர்பான்’’ என்று அழைத்துக்கொண்டனர். இந்தத் தொகையானது ஆலயத்திற்கு ‘‘நேர்ந்து’’கொள்ளப்பட்டது தானே தவிர ‘‘கொடுத்து’’விடப்பட்டதல்ல ! அப்படியானால், இந்தத் தொகையைப் பிள்ளைகள் தங்களிடமே வைத்துக்

கொண்டு வியாபாரங்களில் முதலீடும் செய்யலாம் ! பெற் றோர் தங்கள் மகனிடம், ‘‘என்னப்பா, எங்களுக்கு ஒன்றுமே தருவதில்லை’’ என்று கேட்டால், ‘‘நான் உங்களுக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறது ‘கொர்பான்’ ஆயிற்று; அதாவது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று’’ என்று மகன் கூசாமல் பதில் சொல்லிவிடுவான். இப்பழக்கத்தில் ஆன்மீகத் தோரணை (spiritual) காரணப்பட்டாலும், இது திருமறை போதித்த (Scriptural) ஒழுங்குமுறையல்ல. இப்படிப்பட்ட வற்றைக் கண்டித்துதான் ஆண்டவர் அக்காலத் தலைவர் களைப் பார்த்து, ‘‘நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத் தினாலே தேவனுடைய வார்த்தையைப் பயனற்றதாக்கிவிடு கிறீர்கள்’’ என்றார் (வச 13).

இன்றைக்கும்கூட நமது சபைகளிலுள்ள பல பாரம் பரியங்களுக்கு வேத ஆதாரமே கிடையாது. எந்தச் சபைப் பிரிவும் இதற்கு விதிவிலக்கல்ல. நமது வாழ்க்கையையும் ஊழியத்தையும் கட்டியெழுப்புவதற்காக ஆண்டவர் கொடுத்த தூக்குநூல் பைபிள்தான். எனவேதான் தீமோத் தேயுவுக்குப் பவுல் இவ்விதம் எழுதினான்: ‘‘விளையாட்டு வீரர் எவரும் விதிமுறைகளுக்கு உட்பட்டு விளையாடினால் மட்டுமே வெற்றிவாகை சூடமுடியும்’’ (2 தீமோ 2:5). திருமறைதான் நமக்குச் சட்டப் புத்தகம்.

வேதத்தில் சொல்லப்படாத அனுபவங்கள் மற்றும் வெளிப்பாடுகளைக் குறித்தும் உங்களை எச்சரிக்க விரும்புகிறேன். பைபிளில் எழுதப்படாதது எதுவும் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையற்றது என்பதைத் திட்டமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். 1 கொரிந் தியர் 4:6இல் பவுல் அப்போஸ்தலன் கொடுத்த புத்திமதி எக்காலத்திற்கும் உரியது: ‘‘சகோதரரே, உங்கள் பொருட்டு என்னையும் அப்பொல்லோவையும் எடுத்துக்காட்டாகக் கொண்டு இவற்றைக் கூறினேன். ஏனெனில் ‘எழுதியுள்ள தற்குமேல் போகாதே’ என்பதின் பொருளை எங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள்.’’ பழைய மொழியாக்கத்தில்

(OV), எழுதப்பட்டதற்கு மிஞ்சி "எண்ண" வேண்டாம் என்றிருக்கிறது. அதாவது வேதத்திற்கு மிஞ்சிய எதையும் குறித்து நினைக்கக்கூடக் கூடாதாம்! எந்தவொரு அனுபவமும் வெளிப்பாடும் வேதத்தில் இல்லையா, அப்படியானால் அது நன்மையாய்த் தோன்றினாலும் எனக்கு அது தேவையில்லை என்று ஒதுக்கிவிடவேண்டும், ஒதுங்கிவிடவேண்டும். "The Bible plus or minus zero" என்பதே, அதாவது வேதத்தோடு ஒன்றையும் கூட்டாதே, அதிலிருந்து ஒன்றையும் குறைக்காதே என்பதே சட்டமாயிருக்கவேண்டும்.

திருமறை உன்னதமானது மட்டுமல்ல, அது போதுமானதும்கூட! யோவான் 20:30இல் அப்போஸ்தலன் யோவான் எழுதிவைத்துள்ளதை உன்னிப்பாய்க் கவனியுங்கள்: "இந்தப் புத்தகத்தில் எழுதியிராத அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீடருக்குமுன் செய்தார்." இவையெல்லாம் எந்த அற்புதங்கள் ?... அவையெல்லாம் வேதத்தில் எழுதப்படாதது ஏன் ?... என்றெல்லாம் நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதிலை அப்போஸ்தலன் அடுத்த வசனமாகிய 31ஆம் வசனத்திலேயே கொடுத்துவிட்டான்: "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவரது நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன." அதாவது, வேதத்தில் எழுதப்படாதவை நமது "நித்திய ஜீவனுக்குத்" தேவையற்றவை.

பிரியமானவர்களே, வேதம் எங்கே நிறுத்துகிறதோ அங்கே நீங்களும் நிறுத்திவிடுங்கள். உங்களுக்கு ஒரு சொப்பனம் வந்தது, அல்லது தரிசனம் கிடைத்தது, அல்லது அனுபவம் கிடைத்தது என்று வைத்துக்கொள்வோம். அதை ஒலிபரப்பிக்கொண்டே செல்லாதீர்கள். அதை உங்களுக்குள் வைத்துக்கொள்ளுங்கள். குறிப்பாக, அது திருவசனத்திற்கு முழுக்க முழுக்க ஒத்ததாயிராவிடில் மூச்சுவிடாதீர்கள்! நீங்கள் கேட்ட பிரசங்கியார் பவுலாயிருந்தாலும் பரவாயில்லை; வீட்டிற்குப் போனவுடன், பெரெயா கிறிஸ்தவர்

களைப்போல், கேட்டது திருவசனத்தின்படி சரிதானா என்று அலசிப்பார்க்கவேண்டும், ஆராய்ந்துபார்க்கவேண்டும். சும்மா அப்படியே விழுங்கிவிடக்கூடாது (அப் 17:11). கலாத்திய நாட்டு விசுவாசிகளுக்குப் பவுல் என்ன எழுதினான் தெரியுமா ? கலாத்தியர் 1:8, "நாங்கள் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை நாங்களோ, விண்ணிலிருந்து வந்த தூதனோ, யார் அறிவித்தாலும் அவன் சபிக்கப்படுக!" அடுத்தது, அவன் சொல்லுவதையும் கவனியுங்கள்: "ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்; இப்பொழுது மீண்டும் சொல்லுகிறேன்" (வச 9), வேதத்திற்கு வெளியே போகாதே... போகாதே... போகாதே! ஏற்கனவே திருவசனத்தில் வெளிப்படுத்தப்பட்டவைகளை விட்டு எதுவும் சற்று வித்தியாசமாகவோ, விலகுவதாகவோ தெரிந்தால் கண்ணைமூடிக்கொண்டு, வேண்டாம் என்று சொல்லிவிட்டு, ஜீவன் தப்ப ஓடிவிடுங்கள்!

7

மறைவானவற்றைத் தோண்டித் துருவக்கூடாது.

ஒரு சில காரியங்கள் வேதத்தில் வெறுமனே "சொல்லப் பட்டிருக்கின்றன," அவைகள் போதுமான அளவு "விளக்கப் படவில்லை." இவ்விதக் காரியங்களில் அளவுக்குமீறி ஆர் வங்காட்டக்கூடாது. உபாகமம் 29:29இல் மாறாத பிரமாணம் ஒன்றுண்டு: "மறைவானவை நமது தேவனாகிய கர்த்த ருக்கு உரியவை. வெளிப்படுத்தப்பட்டவையோ, இத்திருச் சட்டத்தின் வார்த்தைகளைக் கடைப்பிடிக்குமாறு, நமக்கும் நம் பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவை."

மறைபொருளாய் வைக்கப்பட்டிருப்பவை மீது நமக்கு நாட்டம் இருக்கக்கூடாது. அவைகள் ஆண்டவருக்கு உரியவை. வெளிப்படையாக, நேரடியாக வெளிப்படுத்தப் பட்டவைதான் நமக்குரியவை, நாம் கீழ்ப்படியவேண்டியவை. பிரியமானவர்களே, திருமறை நிறுத்துமிடத்தில் நீங்களும் நிறுத்திவிடுங்கள்; அதற்கப்பால் போக முயற்சிக்காதீர்கள். வேதம் எதைக் குறித்து அமைதி காக்கிறதோ அதைக் குறித்து நீங்களும் அமைதியாயிருக்க கற்றுக்கொள்ளுங் கள். கடவுளுக்கடுத்த காரியங்களில் பசிதாகம் இருக்க வேண்டும்; ஆனால் சில காரியங்களை எப்படியாவது தெரிந்துகொள்ளவேண்டும், அனுபவித்துவிடவேண்டும் என்று விரைவது வம்பை விலைகொடுத்து வாங்குவதாகும். விலக்கப்பட்டதைக் குறித்து நமது ஆதிப் பெற்றோருக்கு இருந்த ஆர்வம் எவ்விதம் மனுக்குலம் முழுவதையும் கேட்டுக்குள் தள்ளிவிட்டது என்பது நமக்குத் தெரியாததா? கற்பனையையும் தோற்கடிக்குமளவு விதவிதமான பழ

மரங்களுள்ள தோட்டத்திற்குள் மனிதனைக் கடவுள் வைத்தார். நாளுக்கொரு புதுக்கனி என்று பறித்துச் சாப்பிட்டிருந்தால்கூட அங்குள்ள அத்தனைவிதக் கனி களையும் ருசித்துப்பார்க்க 1000 ஆண்டுகள்கூட ஆதா முக்குப் போதாமலிருந்திருக்கும்! மனிதனோ தேவையற்ற ஆர்வத்திற்குப் பலியானான். விலக்கப்பட்ட ஒரே கனியைத் தொட்டுவிட்டான். நீங்களும் நானும் இந்த அவல நிலைக் குத் தள்ளப்பட்டது அதினால்தானே ?

கிறிஸ்தவர்களுக்கு நன்றாய்த் தெரிந்துள்ள இன்னொரு எடுத்துக்காட்டை இங்கு கவனிப்போம். 2 கொரிந்தியர் 12:7, "எனக்கு அருளப்பட்ட ஒப்புயர்வற்ற வெளிப்பாடுகளால் நான் இறுமாப்பு அடையாதவாறு, என் உடலில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது: அது என்னைக் குத்திக் கொடுமைப்படுத்த சாத்தானுடைய தூதனாயிருக்கிறது!" அப்பப்பா, இந்த முள்ளைப்பற்றிய ஆராய்ச்சிகளுக்கு அளவேயில்லை! பவுலுக்கிருந்த முள்ளைப்பற்றி வேதத்தில் சொல்லப்பட்டிருப்பவை: அது அவனது உடலில் இருந்தது; அவன் வீண் பெருமையடையாதிருக்கவே அது கொடுக்கப் பட்டது; அது சாத்தானின் தூதன். இதற்குமேல் பவுலின் முள்ளைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. இங்கு தான் நாம் நமது ஆராய்ச்சியை நிறுத்திக்கொள்ளவேண் டும். பவுலின் முள் என்ன என்று ஆராய முயலுவது தேவை யற்ற காரியம். அது என்னவென்று ஜெபித்துப்பார்க்கிறேன் என்றும் சொல்லாதீர்கள். எழுதப்பட்டதற்கு மிஞ்சிய தக வல்கள் வாசகர்களுக்குத் தேவையில்லையென்று ஆண்ட வர் நிர்ணயித்திருக்கிறார். இந்த அனுபவத்தினால் கிடைத்த படிப்பினைதான் முக்கியம்: "என் கிருபை உனக்குப் போதும்; உன் பலவீனத்தில் என் பலம் உன்னைத் தாங்கும்," இந்தச் சத்தியத்தையே திரும்பத் திரும்பத் தியானித்துக்கொண் டிருக்கவேண்டுமே தவிர, அதற்குமேல் தோண்டித்துருவ ஆசைப்படக்கூடாது. ஒருவேளை யாராவது ஒருவர் உங் களிடம் வந்து, "நான் பத்துநாள் உபவாசித்து ஜெபித்தபோது பவுலின் முள் என்னவென்று ஆண்டவர் வெளிப்படுத்தி விட்டார்" என்று சொல்லுவாரானால், காதைப் பொத்திக் கொண்டு அவ்விடத்தைவிட்டே ஓடிவிடுங்கள்!

இன்னோர் எடுத்துக்காட்டு: இது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தது. தாம் திரும்பிவரும்போது காலங்கள் “எப்படி” இருக்கும் என்றுதான் ஆண்டவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். “ஒலிவமலைமீது இயேசு அமர்ந்திருந்தபோது சீடர்கள் அவரிடம் தனியாக வந்து, நீர் கூறியவை எப்போது நிகழும்? உமது வருகைக்கும் உலக முடிவுக்கும் அறிகுறி என்ன? எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டனர்” (மத் 24:3). “எப்போது நடக்கும்?” என்ற சீடர்களின் கேள்விக்கு, “எப்படி இருக்கும்” என்று இயேசு பதிலுரைத்தார்! அவர்களது கேள்விகளுக்கு மிகவும் கவனமாய்ப் பதிலளித்தார். எங்கு பார்த்தாலும் மக்கள் வஞ்சிக்கப்படுவார்கள் என்றார் (வச 4). தாம் திரும்பிவரும்போது பொதுவாக காரியங்கள் எப்படி யெல்லாம் இருக்கும் என்று வரிசைப்படுத்தினார். அத்துடன் அவர் சொன்னது: “அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தை ஒருவருக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. விண்ணகத் தூதருக்கோ, மகனுக்குக்கூடத் தெரியாது” (வச 36). ஒருவருக்கும் தெரியாதாம்! அவர் திரும்பி வரும்போது நிலவரம் எப்படியிருக்கும் என்பதை மட்டுமே ஆண்டவர் ஒவ்வொன்றாய்ச் சொன்னார்.

அவர் பரமேறுமுன் அவரது சீடர்கள் மறுபடியும் அவரிடம் நியாயமானதொரு கேள்வியைக் கேட்டார்கள். “அங்கே கூடியிருந்தவர்கள் அவரிடம், ‘ஆண்டவரே, இஸ்ரவேலுக்கு ஆட்சியுரிமையை மீண்டும் பெற்றுத்தரும் காலம் இது தானோ?’ என்று கேட்டார்கள்” (அப் 1:6). இஸ்ரவேலன் எவனுக்கும் தணியா தாகம் இதுதான். தலைமுறை தலை முறையாக இந்த மக்கள் எதிர்நோக்கியிருந்தது இதுதான். அப்படியிருந்தும், ஆண்டவர் கொடுத்த பதிலைக் கவனி யுங்கள்: “என் தந்தை தமது அதிகாரத்தால் குறித்துவைத் துள்ள நேரங்களையும் காலங்களையும் அறிவது உங்க ளுக்கு உரியதல்ல” (வச 7). அது உங்களுக்கு “உரியதல்ல,” அல்லது “தேவையல்ல” என்று கூறிவிட்டார். மாறாக, அவர்கள் ஈடுபடவேண்டிய முக்கியமான காரியம் என்ன வென்று தொடர்ந்து கூறினார்: “ஆனால் தூய ஆவி உங்கள்மீது வரும்போது நீங்கள் வல்லமையைப் பெற்று

எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்” (வச 8). கிறிஸ்தவர்களாகிய நாம் “நாள்” குறிக் கக்கூடாது; ஆனால் செய்யவேண்டிய பணிக்குக் “குறி” நியமிக்கவேண்டுமென்பதுதான் இயேசுவின் போதனை. சுவிசேஷத்தினால் சந்திக்கப்படாத மக்களைச் சென்றடை வதற்கான குறிகளை நியமித்துச் செயல்படுங்கள். “எப் பொழுது” என்ற நாட்டத்தை ஒதுக்கிவையுங்கள். எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது இயேசு வருவார்; வந்தே தீருவார்; அது அவரது பொறுப்பு. நாம் நமது வேலையைப் பார்ப்போம்!

“கடைசிக்கால” வெளிப்பாடுகள் என்று சொல்லப்படு வதையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். கடைசிக்காலம் 2001ஆம் ஆண்டிலா துவங்கியது? கிறிஸ்துவின் முதல் வருகையும் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்ததும்தான் கடைசிக் காலத்தைத் துவக்கி வைத்தன. “பல தடவை, பலவகை களில் முற்காலத்தில் இறைவாக்கினர் (தீர்க்கதரிசிகள்) வழியாக நமது மூதாதையரிடம் பேசிய கடவுள், **இக்கடைசி நாட்களில்** தமது மகன் மூலமாய் நம்மிடம் பேசியுள்ளார்” (எபி 1:1). இயேசு கிறிஸ்துதான் மனுக்குலத்திற்குக் கடவுளின் இறுதியான வெளிப்பாடு: “மக்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள்?... நீங்கள் என்னை யாரென்று சொல்லு கிறீர்கள்?” என்று இயேசு கேட்டபோது, சீமோன் பேதுரு கொடுத்த பதில்: “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து” (மத் 16:13−16). இதுதான் வெளிப்பாடுகளிலெல் லாம் வெளிப்பாடு! உடனே சீமோனை மெச்சிக்கொண்டு இயேசு சொன்னது: “இது மானிடம் தந்த வெளிப்பாடு அல்ல; தெய்வீகம் அருளிய வெளிப்பாடு” (வச 18). அசைக்க முடி யாத பாறைபோன்ற இந்த வெளிப்பாட்டை அடித்தளமாய்க் கொண்டுதான் அதன்மீது தமது சபையைக் கட்டப்போவதாக இயேசு வாக்களித்தார். ஆம், இயேசுவானவர்தான் கட வுளின் இறுதிக்காலச் செய்தி. அப்படியானால், பரிசுத்த ஆவியானவரைப் பற்றியென்ன என்று கேட்கலாம். இயேசு வின் வார்த்தைகளிலேயே அதற்குப் பதிலுண்டு: “பரிசுத்த ஆவியானவர் **தாமாக** எதையும் **பேசமாட்டார்...** அவர்

என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்'' (யோ 16:13,14). ஆம், கடைசிக்கால வெளிப்பாடு என்றால், கிறிஸ்துவின் வார்த்தைகள் மூலமாகவும் ஆவியானவரின் சாட்சி மூலமாகவும் கிறிஸ்துவைக் குறித்து நமக்குக் கிடைக்கும் வெளிப்பாடுதான். இதற்குமேல் ஒன்றும் கிடையாது.

இறுதிக்கால வெளிப்பாட்டின் இன்னொரு குறிப்பு என்னவென்றால், விசுவாசிக்கும் யூதரல்லாதோரும் திருச்சபையில் அங்கமாவார்கள் என்பதே. காலா காலமாய் இரகசியமாயிருந்த இச்சத்தியம் இப்பொழுது அப்போஸ்தலர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. எபேசியர் 3:5,6, ''அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதுவருக்கும் (அப்போஸ்தலர்), இறைவாக்கினருக்கும் (தீர்க்கதரிசிகள்) வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தியின் வழியாக, பிறவினத்தாரும் கிறிஸ்து இயேசு மூலம் உடன் உரிமையாளரும், ஒரே உடலின் உறுப்பினரும், வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அந்த மறைபொருள்.'' பிரியமானவர்களே, இவையிரண்டும்தான் பிரதானமான இறுதிக்கால வெளிப்பாடுகள். ஏதோ இத்தனை ஆண்டுகளும் சொல்லவேண்டிய ஒரு முக்கியமான காரியத்தை ஆண்டவர் மறந்துவிட்டார் போலும்; இப்பொழுது அது அவருக்குத் திடீரென்று நினைவுவந்துவிட்டது; இப்படியெல்லாம் தவறாய் எண்ணிவிடாதீர்கள்!

நமது அறிவு குறைவுள்ளது என்பதைத் தயங்காமல் ஒத்துக்கொள்ளவேண்டும். நிறைவானது அல்லது பரிபூரணமானது இனிதான் வரவிருக்கிறது (1 கொரி 13:9,10). வரப்போகிற நிறைவானவர் இயேசுதானே? அவர் வரும்போது நமது ஆவி, ஆன்மா, உடல் அத்தனையும் முழுமையாய்ப் பரிசுத்தமாக்கப்படும் (1 தெச 5:23). வரப்போகும் புதிய வானமும் புதிய பூமியும் பூரணமானதாய் இருக்கும் (2 பேது 3:13). எல்லாக் காரியங்களும் சீர்திருத்தம் பெற்று ஆதி

நிலையேகிவிடும் (அப் 3:19−21). அதுவரை இப்பொழுது நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பவைகள் போதும். வரம்புகளை மீறி விலக்கப்பட்ட எல்லைகளுக்குள் நுழைந்துவிடாதீர்கள்.

பரலோகத்தைக் குறித்தும் நரலோகத்தைக் குறித்தும் நமக்குத் தெரிந்திருக்கவேண்டியவை அத்தனையும் திருமறையில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டாயிற்று. ''தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தியுள்ளார்'' (1 கொரி 2:9,10). இதற்கு மிஞ்சி நாம் எதையும் தெரிந்துகொள்ளத் தேவையில்லை. ''நான் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டேன்; பரலோகத்திற்குப் போய்விட்டு வந்தேன்'' என்றெல்லாம் யாராவது சொன்னால் அவர்கள் பின்னால் பைத்தியமாய் அலையாதீர்கள். நாம்தான் எப்படியும் பரலோகத்திற்குப் போகப்போகிறோமே, அப்பொழுது எல்லாவற்றையும் நேரடியாகப் பார்த்துக்கொள்ளலாம்! பரலோகத்தைவிட நரகத்தைக் குறித்தே இயேசு ஏனோ அதிகம் பேசினார். நமக்கு நரகத்தைக் குறித்த கடுகளவு தரிசனம் கிடைத்தால் போதும்! எப்படியாவது எங்குமுள்ள எவருக்கும் நற்செய்தியை ஓடி ஓடி அறிவித்துவிட எதையும் செய்யத் துடியாய்த் துடித்துக்கொண்டிருப்போம்! கடவுள் ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளவைகளில் திருப்தியாயிருப்போம். மூன்றாம் வானம் வரை எடுத்துக்கொள்ளப்பட்ட பவுல்கூட அவன் அங்கு பார்த்தவைகளையும் கேட்டவைகளையுமே சொல்லிக்கொண்டு அலையவில்லை (2 கொரி 12:4). மாறாக அவன் எங்கும் சென்று சுவிசேஷத்தையே பிரசங்கித்துக்கொண்டிருந்தான்.

8

ஜெபவாழ்வை அலட்சியப்படுத்தக்கூடாது.

ஆன்மீகச் சத்தியங்களைக் கேட்டவுடன் அவற்றிற்குத் தலையசைப்பது சுலபம்; ஆனால் அவற்றை வாழ்வில் பயிற்சிப்பது கடினம். ஆனாலும் அதுதான் காரியம். அப்போஸ்தலன் யாக்கோபு இதைக் குறித்து நமக்கு எச்சரிப்பு விடுத்துள்ளான். யாக்கோபு 1:22−25, ''இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதின்படி நடக்கிறவர்களாகவும் இருங்கள். ஏனென்றால், வார்த்தையைக் கேட்டு, அதன்படி நடவாதோன், கண்ணாடியிலே தன் முகத்தைப் பார்த்துவிட்டுச் சென்று உடனே தான் எவ்வாறு இருந்தான் என்பதை மறந்துவிடும் ஒரு மனிதனுக்கு ஒப்பாவான். ஆனால் நிறைவான விடுதலையளிக்கக்கூடிய சட்டத்தைத் தொடர்ந்து கவனித்து, அதைத் தொடர்ந்து கற்போர், தாம் கேட்டதை மறந்துவிடுவதில்லை; அவர்கள் அதற்கேற்ற செயல்களைச் செய்வார்கள்; தம் செயல்களால் பேறுபெற்றவர் ஆவார்கள்.''

திருமறை இங்கு முகம்பார்க்கும் கண்ணாடிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. கண்ணாடி நல்லதாயிருந்தால் அது முகத்திலுள்ள சுருக்குகள், வடுக்கள் போன்ற எல்லாவற்றையும் காட்டிவிடும். இதையெல்லாம் மறந்துவிட்டு நான் வெளியே நடந்துசென்றால் நான்தான் உலக அழகன் என்றுகூட நினைத்துக்கொள்ள வாய்ப்புண்டு! ஆனால் நான் கண்ணாடியில் பார்த்தது எனக்கு நினைவிருக்குமானால் இரண்டு கால்களையும் ஒழுங்காய்த் தரையில் ஊன்றி நடப்பவனாயிருப்பேன். அதுதான் திருமறை செய்யும் காரியம். அது

பொய்சொல்வதில்லை. நாம் இருக்கிறபடியே அது நம்மைப் படம்பிடித்துக் காட்டுகிறது! நமது குறைகளையும் பூசி மெழுகுவதில்லை. வேத புத்தகம் நமது குறைகளை நமக்குக் காட்டுமே தவிர, அதற்குமேல் ஆவன செய்யவேண்டியது நமது பொறுப்புதான். இதில்தான் நாம் தவறிவிடுகிறோம். எனவேதான் மேற்கூறிய வசனப்பகுதியில் யாக்கோபு ''மறந்துவிடாதீர்கள்'' என்று எச்சரிக்கிறான். மறந்துவிட்டால் கனியற்றவர்களாகிவிடுவோம் (வச 24,25). இச்சிறுநூலில் கொடுக்கப்பட்டுள்ள திருத்துதல் உபதேசங்களை அவ்வப்போது வாசித்து நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அப்படியானால் நீங்கள் உங்கள் செயல்களில் பாக்கியம் நிறைந்தவர்களாயிருப்பீர்கள், சித்திபெறுவீர்கள் (வச 25).

சிலர் தங்களது தனித்தியான நேரம் முழுவதையும் வேத வாசிப்பிலேயே செலவழித்துவிட்டு ஜெபத்தையோ அசட்டை செய்கின்றனர். மற்றவர்களோ நிறைய நேரம் ஜெபித்துவிட்டு அவசர அவசரமாய் பைபிள் வாசித்து முடித்துவிடுவார்கள். இவ்விரு ஓரங்களும் தவிர்க்கப்படவேண்டும். இந்த இரண்டு பயிற்சிகளும் சமநிலைப்படுத்தப்படவேண்டும். இந்தச் சமநிலையைச் சித்தரிக்கும் நேர்த்தியானதோர் எடுத்துக்காட்டு நெகெமியா 9ஆம் அத்தியாயத்தில் உண்டு. இறைமக்கள் இழந்துபோனவற்றைத் திரும்பவும் அவர்களுக்குக் கொண்டுவருவதற்குக் கருவிகளாகக் கடவுள் எஸ்றாவையும் நெகேமியாவையும் பயன்படுத்தினார். எருசலேமின் மதில்சுவர்களும் தேவாலயமும் இடிக்கப்பட்டிருந்தன. எஸ்றா மார்க்கத் தலைவனாயிருந்தான்; நெகேமியா அரசு அதிகாரியாயிருந்தான். சுவர்கள் திரும்பவும் கட்டியெழுப்பப்பட்டன. அதைக் கொண்டாடிய நாளில் மக்கள் என்ன செய்தார்களென்பதை நெகேமியா 9:3இல் வாசிக்கிறோம்: ''பகலில் கால் பகுதியைத் தங்கள் இடத்திலேயே எழுந்து நின்று கடவுளாகிய ஆண்டவரின் திருச்சட்டநூலை வாசிப்பதிலும், மற்றொரு கால் பகுதியைத் தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதிலும், தங்கள் கடவுளாகிய ஆண்டவரைத் தொழு

வதிலும் செலவழித்தனர்.'' அதாவது, இறைவார்த்தையை (Word) வாசிப்பதற்கும் இறைவணக்கம் (worship) செய்வதற்கும் தங்கள் நேரத்தைச் சமமாய்ப் பங்கிட்டனர். ஆண்டவர் தங்களோடு பேசுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டார்களோ, அதே அளவுநேரம் அவர்கள் ஆண்டவரோடு பேசவும் எடுத்துக்கொண்டனர். அது தேவனோடு உறவாடும் இருவழிப்பாதை அனுபவமாயிருந்தது.

இவ்விதம் இறைவார்த்தைக்கும் இறைவணக்கத்திற்கும் நேரத்தைச் சரிசமமாய்ப் பிரிக்கும் பழக்கம் தானியேலின் வாழ்க்கையிலும் காணப்பட்டது. அவனது சாட்சியைப் பாருங்கள்: ''தானியேல் ஆகிய நான், எருசலேம் பாழ்நிலையில் கிடக்கும் காலம், எரேமியா தீர்க்கதரிசிக்கு ஆண்டவர் உரைத்தபடி எழுபது ஆண்டுகள் ஆகும் என்று நூல்களிலிருந்து படித்தறிந்தேன். நான் நோன்பிருந்து, சாக்கு உடை அணிந்து, சாம்பலில் அமர்ந்து, என் தேவனாகிய ஆண்டவரிடம் திரும்பி மன்றாடி வேண்டிக்கொண்டேன்'' (தானி 9:2,3). ஒன்று மற்றொன்றுக்கு வழிநடத்திச் செல்வதைக் கவனியுங்கள். தானியேல் முதலாவது மறைநூல் மூலம் கடவுள் பேசுவதைக் கேட்கிறான்; பின்னர் அந்த அறிவோடு அவரோடு பேசுகிறான். இதனால்தான் வேதத்தை முடிந்த வேளைகளிலெல்லாம் முழங்காலில் நின்று தியானிக்கும்படி மக்களுக்கு அறிவுறுத்துகிறேன். இங்கிலாந்தைச் சேர்ந்த ஜார்ஜ் முல்லர் (1805–1898) என்ற பக்தனை மக்கள் அடிக்கடி சந்தித்து அவரது அசாதாரண விசுவாசத்தைக் குறித்துக் கேள்விகள் கேட்டார்களாம். ஏராளமான அனாதைப் பிள்ளைகளை அவர் பராமரித்துவந்தார். தனது பொருளாதாரத் தேவைகளுக்காக மறைமுகமாகக்கூட மக்களிடம் கேட்பதைத் தவிர்ப்பாராம். பலவேளைகளில் அவரது ஜெபங்களுக்கான பதில்கள் கடைசி மணித்துளிகளில்தான் வருமாம். அவரது வாழ்க்கை சரிதை நூலைக் கட்டாயம் வாங்கி வாசித்துப்பாருங்கள். ''உங்களது விசுவாச வரத்தின் இரகசியம் என்ன ?'' என்று அவரிடம் கேட்கப்பட்டபோது,

அவர் கொடுத்த பதில்: ''என்னிடத்தில் விசுவாச வரம் என்று ஒன்று இருக்கிறதென்று நான் சொல்லமாட்டேன். ஆனால் என் வாழ்நாளில் வேதப்புத்தகத்தைத் திரும்பத் திரும்ப வாசித்திருக்கிறேன். முழங்காலில் நின்றுமட்டும் 48 முறை முழு வேதத்தையும் வாசித்திருக்கிறேன்!''

நண்பரே, நீங்கள் ஜெபத்தில் நேரம் செலவழிக்காமல் வேதத்தைப் படித்துக்கொண்டுமட்டுமிருந்தால் வறண்டு போவீர்கள். அறிவு இறுமாப்பை உண்டாக்கும். வேதத் தியானமில்லாமல் ஜெபித்துக்கொண்டுமட்டுமிருந்தால் உங்கள் கால் தரையில் நிற்காது. கேள்விக்குரிய வெளிப்பாடுகளால் நிரம்பி, குழம்பி, ஆட்டம் காண்பீர்கள். யாராவது ஓர் ஊழியர் 40 நாட்கள் உபவாசிக்கப்போவதாக அறிக்கை விட்டால், நான் உடனே, ''ஆண்டவரே, வஞ்சகமான வெளிப்பாடுகளிலிருந்து இவரைக் காத்துக்கொள்ளுமப்பா'' என்றுதான் ஜெபிப்பேன். ஏனென்றால், இந்த உபவாச ஜெபவேளைகளில் ஜெபத்திற்கும் வசனத்தியானத்திற்குமிடையே சமநிலை காக்கப்படாவிடில் தடுமாற்றம் ஏற்படுவது நிச்சயம்.

வேதத் தியானமானது ஜெப ஆவியில் நனையும்போதுதான் தலையறிவு இதய அனுபவமாய் மாறும். உயிர்த்தெழுந்த ஆண்டவர் எம்மாவூருக்குச் சென்றுகொண்டிருந்த சீடர்களோடு உரையாடிக்கொண்டு நடந்துசெல்கையில், ''மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்'' (லூக் 24:27). இரத்தினச் சுருக்கமான அது முழுவேதத்தையும் பிழிந்தெடுத்த அமிர்தம் போலிருந்திருக்கும்! அன்று அதை எவராது ஒலிப்பதிவு செய்திருந்தால் எப்படியிருக்கும் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு! ஆதியாகமம் துவக்கி மல்கியா வரையுள்ள புத்தகங்களிலிருந்து தம்மைக் குறித்து எழுதப்பட்டிருப்பவைகளை இயேசுதாமே விளக்கியது

சாதாரணமாகவா இருந்திருக்கும் ? பரவசம் வானை எட்டியிருக்கும் ! அவர்கள் இயேசுவைத் தங்களோடு வந்து தங்கும்படி அவரை வருந்தியழைத்தார்கள். என்னே ஐக்கியம் ! இயேசுவானவர் அவர்களோடு நடந்துவந்த வழியில் சொல்லிக்கொண்டிருந்தவற்றையெல்லாம் பின்னர் நினைவுபடுத்திப் பார்த்தனர். அதைக் குறித்து அவர்கள் சொன்னதென்ன தெரியுமா ? “வேத வாக்கியங்களை அவர் நமக்கு விளக்கிக்காட்டியபோது, நமது இதயங்கள் நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா ?” (வச 32). ஆம், நாமும் ஜெப ஆவியுடன், ஆண்டவரோடு நெருங்கியிருந்து கொண்டு, வேதத்தைத் தியானித்தால் இவ்விதமாகவே உணருவோம்.

எனது தியான வாழ்வைப் பொறுத்தவரை, இந்தச் சமநிலையை ஓர் இறுக்கமான சட்டமாய் வைத்துக்கொள்வதில்லை. சில நாட்கள் நெடுகவே வேதத்தியானத்திலேயே செலவழிப்பேன்; பின்னர் சில நாட்கள் ஜெபத்தில் தரித்திருப்பேன். பலவித தலைப்புகளின் மீது வேதத்தை ஆராயும் போதெல்லாம், ஜெப ஆவியைத் தக்கவைத்துக்கொள்ளுவேன். எனக்குத் தெரிந்த திருமறை உபதேசங்கள் பல எனது மாணவப்பருவத்தில் கற்றுக்கொண்டவையே. வேதத்தையும், குறிப்பேட்டையும், ஒரு திருக்குச்செம்பில் குடிநீரையும் எடுத்துக்கொண்டு காடுகளுக்குள் காலையிலேயே சென்றுவிடுவேன். மாலைவரை அங்கேயே இருந்து திருவசனத்தை ஆர்வமாய்த் தியானிப்பேன். ஏதோவொரு வசனமோ, வசனப்பகுதியோ புரிந்துகொள்ளமுடியாத அளவு கருகலாயிருந்தால், “ஆண்டவரே, உதவும்” எனக் கதறுவேன். இவ்வித ஜெப ஆவியோடு படிக்கும்போதுதான் எனது வேத அறிவு பெருமளவு வளர்ந்தது.

“ஓர் அடி இறக்கும், ஆண்டவரே, ஓர் அடி இறக்கும்” என்று சிறுவனொருவன் காட்டிற்குள் ஜெபித்துக்கொண்டிருந்தானாம். அதைக் கவனித்துக்கொண்டிருந்த முதியவர்

ஒருவர், சிறுவன் ஜெபித்து எழுந்ததும், “தம்பி, எதற்காக இப்படி ஜெபித்தாய் ?” என்று கேட்டாராம். “எனது அப்பாவுக்காகத்தான் ஜெபித்தேன்” என்ற அச்சிறுவன் தொடர்ந்து சொன்னது, “எனது அப்பாவுக்கு பைபிள் அட்டைமுதல் அட்டைவரை தண்ணீர்பட்ட பாடு; ஆனால் எல்லாமே தலையறிவுதான். ஓரடி இறங்கினால்தான் அவரது இருதயத்திற்குள் அது நுழையும் !”

பிரியமானவர்களே, உங்கள் தலையிலிருப்பதையெல்லாம் இருதயத்திற்கு இறக்குவது ஜெபமே. இந்தப் பின்னணியில் நடைமுறையாக உங்களுக்கு ஓர் ஆலோசனை தர விரும்புகிறேன் ! வேதத்தியானத்தைக் கிரமமாய்க் கடைப்பிடித்தும் உங்கள் ஆன்மீக வாழ்வில் ஒரு வறட்சியை நீங்கள் உணர்ந்தால், ஜெபவாழ்வை ஆழப்படுத்துங்கள். மாறாக, ஜெபத்தில் தீவிரமாயிருந்தும் ஆன்மீக வாழ்வில் பலங்குன்றியிருப்பதாய் உணர்ந்தால், நேரமெடுத்து, நிதானமாய்த் திருவசனத் தியானத்தில் தரித்திருங்கள். இவையிரண்டும் ஒரு கிறிஸ்தவனுக்கு இரண்டு இறக்கைகள்போல் !

9
கீழ்ப்படியத் தாமதிக்கக்கூடாது.

கண்ணால் காண்பதெல்லாம் தற்காலிகமானவையே. கட்டிடங்கள், தட்டுமுட்டு சாமான்கள், வாகனங்கள், துணி மணிகள், பிரசங்கபீடங்கள், இப்படி எல்லாமே தற்காலிக மானவையே. கண்ணால் காணக்கூடியதும், அதே வேளை யில் நிரந்தரமானதும் நித்தியமானதுமான ஒன்றேயொன்று தான் விதிவிலக்கு. அதுதான் சத்திய வேதம்! இதை ஆண்ட வராகிய இயேசுதாமே சொல்லிவிட்டார்: ‘‘விண்ணும் மண் ணும் ஒழிந்துபோகும்; என் வார்த்தைகளோ ஒழிவதே யில்லை’’ (மத் 24:35). இங்கே ஆண்டவர் மண்ணுலகு என்று மக்களாகிய நாம் வாழுமிடத்தைக் குறிப்பிடுகிறார். அப் போஸ்தலன் பேதுரு இதே சத்தியத்தை மண்ணுலகில் வாழும் மக்களை ஒப்புமைப்படுத்திச் சொன்னார்: 1 பேதுரு 1:24,25, ‘‘மானிடர் அனைவரும் புல்லைப் போன்றவர்; அவர்களது மேன்மை வயல்வெளிப் பூவைப்போன்றது; புல் உலர்ந்து போம்; பூ வதங்கி விழும். நமது ஆண்டவரின் வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கும்.’’ மண்ணுலகும் ஒழிந்து போகும், மண்ணுலகத்தாரும் ஒழிந்துபோவர், விண்ணவரின் வார்த்தைமட்டுமே என்றும் நிற்கும். ஆம், நாம் மோட்சத் திற்குச் செல்லும்போது அங்கேயும் பைபிள் இருக்கும், அல்லேலூயா! இப்படிப்பட்ட புத்தகத்தை மற்ற புத்தகங்களை வாசிப்பதுபோல் ஏனோதானோவென்று வாசிக்கமுடியாது. எனவேதான், ‘‘எப்படித் தியானிக்கக் **கூடாது**’’ என்று படித்துக்கொண்டிருக்கிறோம். இத்தலைப்பில் 9ஆம் பாடத் திற்குள் வந்துவிட்டோம்: ‘‘கீழ்ப்படியத் தாமதிக்கக்கூடாது.’’

இன்றையக் கிறிஸ்தவர்களின் தேவை கூடுதல் வெளிச் சமோ வெளிப்பாடோ அல்ல, கூடுதல் கீழ்ப்படிதலே! நாமெல் லாருமே ஒன்று கீழ்ப்படியமாட்டோம், அல்லது தாமதமாய்க் கீழ்ப்படிவோம், அல்லது அரைகுறையாய்க் கீழ்ப்படிவோம். திருப்பாடகனின் சாட்சி நமக்கு எத்தனை சவால் என்று பாருங்கள்: ‘‘உமது கட்டளைகளைக் கடைப்பிடிக்க நான் விரைகின்றேன், காலம் தாழ்த்தவில்லை’’ (சங் 119:60). பிரியமானவர்களே, நாம் ஒவ்வொருவரும் இவ்விதமாய்த் திருப்பாடகனைப்போல சாட்சிபகர முடிந்தால் இந்த உலகம் இப்போது இருக்கிற விதமாகவா இருக்கும் ? எத்தனையோ காரியங்களை அவ்வளவு விறுவிறுப்பாய், சுறுசுறுப்பாய்ச் செய்துவிடுகிறோம். திருவசனத்திற்குக் கீழ்ப்படிதல் என்று வந்தவுடன் ஆமை வேகம்தான்!

துவக்க கால அப்போஸ்தலரும் சீடரும் உடனடிக் கீழ்ப் படிதலை வெகுவாய் வற்புறுத்தினார்கள். தமஸ்குவுக்குச் செல்லும் சாலையில் ஆண்டவர் சவுலைச் சந்தித்தார். விண்ணிலிருந்து பிரகாசித்த ஒளியொன்று அவனை இம் மண்ணுலகிற்கு மூன்று நாட்கள் குருடாக்கிற்று. அனனியா என்ற சீடனை சவுலுக்குத் தொடர்பணி செய்யுமாறு ஆண்ட வர் அவனிடம் அனுப்பினார். அவன் சவுலிடம் சென்று அவனு டன் பேசிக்கொண்டிருந்தபோது கர்த்தருக்குத் திருமுழுக் கில் கீழ்ப்படிவதற்கு சவுலுக்குச் சற்றுத் தயக்கம் இருப்பதைக் கண்டுணர்ந்தான். உடனே அவன் சவுலைப் பார்த்து, ‘‘இப் பொழுது நீ தாமதிக்கிறதென்ன ? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு’’ என்றான் (அப் 22:16). இதனால்தான், ஆதிச்சபையிலே, கீழ்ப்படிதலின் அடையாள மாக, திருமுழுக்கை உடனுக்குடன் விசுவாசிகளுக்கு, அது எந்த இடமாயிருந்தாலும் சரி, எந்த நேரமாயிருந்தாலும் சரி, கொடுத்துவிட்டார்கள். தமது ஊழியரின் சார்பில் ஆவியான வர் அசைவாடிச் செயல்பட்டபோது, ஒரு நள்ளிரவில், சிறைய திகாரி ஒருவன் பாவவுணர்வடைந்தான். இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்று அவன் அந்தத் திருப்பணி யாளரிடம் வினவினான். ‘‘ஆண்டவராகிய இயேசு கிறிஸ் துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும்

இரட்சிக்கப்படுவீர்கள்'' என்ற முழுமையான பதில் உடனடியாய் வந்தது (வச 31). அவனும் அவன் குடும்பத்தினர் அனைவரும் **உடனே அந்த இரவில்தானே** திருமுழுக்கு பெற்றனர் என்கிறது வேதம் (வச 33). விடியட்டுமே என்றுகூட அவர்கள் காத்திருக்கவில்லை!

எத்தியோப்பியாவைச் சேர்ந்த நிதியமைச்சர் ஒருவர் எருசலேமிலிருந்து தனது நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியிலேதானே அவருக்கு நற்செய்தியை விளக்கிச் சொல்லும்படி ஆண்டவர் சுவிசேஷகன் பிலிப்புவைப் பணித்தார். அவர்களிருவருமாகப் பயணித்துக்கொண்டிருக்கையில் பிலிப்புவிடம் அந்த மந்திரி கேட்டது: ''இதோ, தண்ணீர் உள்ளதே; நான் திருமுழுக்கு பெற ஏதாவது தடையுண்டா?'' (அப் 8:36). அவர்களிருவரும் உடனே தேரிலிருந்து இறங்கினார்கள். அந்தப் பாலைநிலப் பாதையிலேயே அமைச்சருக்குத் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. கடவுள் நம்மிடம் எதையாவது செய்யச் சொல்லுவாரானால், நாம் அப்படியே கீழ்ப்படியவேண்டும், அப்பொழுதே கீழ்ப்படியவேண்டும் என்பதைப் போதிக்கத் திருமறையில் ஏராளம் எடுத்துக்காட்டுகள் உண்டு.

விதைக்கிறவனுடைய உவமையை விளக்கியதை அடுத்து, உடனே ஆண்டவர் சொல்லிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''நீங்கள் கேட்கிற **விதத்தைக்** குறித்துக் கவனியுங்கள்'' (லூக் 8:18). ''நீங்கள் எத்தகைய மனநிலையில் கேட்கிறீர்கள் என்பதுபற்றிக் கவனமாயிருங்கள்'' என்று இன்னொரு மொழியாக்கம் கூறுகிறது. அதாவது கீழ்ப்படியவேண்டுமென்ற மனப்பான்மையுடன் கேட்கிறோமா அல்லது கூடுதல் விபரங்களை அறிந்துகொள்ளவேண்டுமென்று கேட்கிறோமா? அடுத்து இயேசு சொன்னது: ''உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனிடமிருந்து தனக்கு உண்டென்று அவன் நினைப்பதும் எடுத்துக்கொள்ளப்படும்.'' ஆம், கீழ்ப்படியும் மனநிலை கொண்டுள்ளவர்க்கு இறைவெளிப்பாடுகள் வந்துகொண்டேயிருக்கும். நீங்கள் வேதத்தை நெடுகவே வாசித்துக் தியானித்துவரும் பழக்கத்தில் திடீரென்று பரவசக்குறைவும் தேக்கநிலையும்

காணப்படுவதாக உணரலாம். ஏராளம் வாசித்துக்கொண்டேயிருப்பீர்கள், ஆனால் ஓர் உயிரோட்டம் இல்லாமலிருக்கும். இந்த வறட்சி ஏன் என்று உங்களுக்குப் புரியாதிருக்கலாம். ஒருவேளை திருவசனத்தை வாசித்து வாசித்தும் கீழ்ப்படிதலில் நீங்கள் பின்தங்கியிருப்பீர்கள். தனது பாடங்களில் நிறைய நிலுவை வைத்திருக்கும் மாணவனை யார் அடுத்த மேல் வகுப்புக்கு அனுப்புவார்? விதைக்கிறவன் உவமையை ஆண்டவர் விளக்கி முடித்ததும் என்ன நடந்தது என்று இப்படி வாசிக்கிறோம்: ''இயேசுவின் தாயும் அவரது சகோதரர்களும் அவரிடம் வந்தார்கள். ஆனால் மக்கள் திரளாக இருந்த காரணத்தால் அவரை அணுகமுடியவில்லை. 'உமது தாயும் சகோதரர்களும் உம்மைப் பார்க்க விரும்பி வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள்' என்று அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து, 'இறைவார்த்தையைக் **கேட்டு** அதின்படி **செயல்படுகிறவர்களே** என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்' என்றார்'' (வச 19−21). ''இறைவார்த்தைக்குக் கீழ்ப்படிதல்'' என்ற கருத்தே இந்த அத்தியாயத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடந்த சம்பவங்களில் இயேசுவின் எண்ணத்தில் மேலோங்கி நின்றதாய்க் காண்கிறோம்.

எனது சார்பிலும் உங்கள் சார்பிலும் நான் ஒருசில கேள்விகளைக் கேட்கட்டும். கீழ்ப்படிய மனதில்லாதவர்களுக்கு ஆண்டவர் ஏன் வீணாகத் தமது வெளிப்பாடுகளைக் கொடுத்துகொண்டேயிருக்கவேண்டும்? தமது சொற்படி செய்ய விரும்பாதவர்களுக்கு ஆண்டவர் ஏன் ஆலோசனைகளையும், படிப்பினைகளையும், கற்பனைகளையும் கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும்? தீர்க்கன் ஏசாயா மூலம் ஆண்டவர் கடுமையான சில வார்த்தைகளைச் சொன்னார்: ''தேடாதவர்கள் என்னைக் கண்டடைய இடமளித்தேன்; நாடாதவர்களுக்கு என்னை வெளிப்படுத்த இசைந்தேன்... ஆனால் இஸ்ரவேல் இனத்தாரைப் பற்றி, 'தங்கள் எண்ணங்களின்படி எனக்குக் கீழ்ப்படியாமல் நடக்கும் கலகக்கார மக்களினத்தின்மீது நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன்'' (ரோ 10:20,21). ஒரு நிலையில் ஆண்டவர்தாமே விரக்தியின் விளிம்பிற்கு வந்துவிடுகிறார்

போலும்! இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைத்த அளவு கற்பனைகளும் வெளிப்பாடுகளும் வேறு எந்த நாட்டின ருக்கும் கிடைக்கவில்லை (உபா 4:8). ஆண்டவர் அவர் களிடம் தீர்க்கதரிகளை அனுப்பிக்கொண்டேயிருந்தார். அவர்கள்மீது பரலோகத்திலிருந்து அப்பத்தைப் பொழிந்து கொண்டேயிருந்தார். அவர்களோ கீழ்ப்படியாதவர்களாய், தேவன் அவர்களிடமிருந்து எதிர்பார்த்த அத்தனைக்கும் எதிர்மாறாய் நடந்து வந்தனர். ஒரு வேளை வந்தது, அப் பொழுது ஆண்டவர், "கீழ்ப்படியாத மக்களை நோக்கி எவ்வளவு காலம்தான் நான் எனது எதிர்பார்ப்புக் கரங்களை நீட்டிக்கொண்டிருப்பேன்? இனி நான் யூதரல்லாத வேறினத் தாரிடம் கவனத்தைத் திருப்பப்போகிறேன்" என்றார்.

நெடுகவே தேவன் உங்களோடு பேசிவரும் காரியங் களுக்கு நீங்கள் கீழ்ப்படியாது சென்றுகொண்டிருந்தால், ஒரு நாள் வரும், அப்பொழுது அவர் நம்மைக் கடந்து, தாண்டிச் சென்றுவிடுவார். சவுலரசனுக்கு நிகழ்ந்தது அதுதானே? சவுலரசனிடம் தீர்க்கன் சாமுவேல் சொன்ன வார்த்தை களைக் கவனியுங்கள்: "நீர் ஆண்டவரின் வார்த்தையைப் புறக்கணித்தீர்; அவரும் உம்மை அரசப் பதவியினின்று நீக்கி விட்டார்... ஆண்டவர் இன்று இஸ்ரவேல் அரசை உம்மிட மிருந்து கிழித்து, உம்மைவிடச் சிறந்த உமது தோழன் ஒருவனுக்கு அதைத் தந்துவிட்டார்" (1 சாமு 15:23,28). பிரியமானவரே, உங்களை விட்டால் ஆண்டவருக்கு வேறே ஆளில்லை என்று மட்டும் கனவிலும் எண்ணிவிடாதீர்கள். எந்த அளவுக்கு நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறீர் களோ அந்த அளவுக்குத்தான் அவரது வழிகளைக் குறித்த உங்கள் அறிவு உயரும், ஆழப்படும்.

"அவரது சித்தத்தின்படிச் **செய்ய** மனதுள்ளவன் எவனோ... அவன் அறிந்துகொள்வான்" என்றார் இயேசு (யோ 7:17). அவரது சித்தத்தை **அறிந்துகொள்ள** மன துள்ளவன் என்று சொல்லாமல், அவரது சித்தத்தின்படிச் **செய்ய** மனதுள்ளவன் என்று ஆண்டவர் சொன்னதைக் கவனியுங்கள். வேதத்தை அலசி ஆராய்வதினால் அல்ல, முழுமனதோடு அதற்குக் கீழ்ப்படிவதின் மூலமாகவே நாம்

அதை நன்றாய்ப் புரிந்துகொள்ளுகிறாம். கீழ்ப்படிதலின் ஆவியால் எப்பொழுதும் நிறைந்திருக்கிறவர்களே திரு மறையின் மறைவான பொக்கிஷங்களைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருப்பார்கள். திருவசனம் உங்களுக்கு விளங் காவிட்டாலும், அதற்கு முதலாவது கீழ்ப்படியுங்கள். வெளிப் படுத்துதல் 1:3இல் இப்படி வாசிக்கிறோம்: "இந்தத் தீர்க்க தரிசன வசனங்களை **வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும்** இதில் எழுதியிருக்கிறவைகளைக் **கடைப்பிடிக்கிறவர் களும்** பாக்கியவான்கள்" அக்காலத்தில் ஆளுக்கொரு வேதப் புத்தகம் இருந்ததில்லை. தோற்சுருளை எடுத்து ஒருவன் வாசிப்பான், மற்றவர்கள் கேட்பார்கள். எனவேதான் "வாசிக்கிறவன்" என்பது ஒருமையிலும், "கேட்கிறவர்கள்" என்பது பன்மையிலும் தரப்பட்டுள்ளது. "கேட்பதை" அடுத்து "விளங்கிக்கொள்வது" அல்ல, "கடைப்பிடிப்பது" வருகிறது! நமதாண்டவரது தாயாகிய மரியாளின் வாழ்வில் இச்சத் தியம் அழகாய் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அவள் கருத்த ரித்து ஒரு மகனை ஈன்றெடுப்பாள் என்ற தேவதூதனின் வார்த்தைகள் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கின. இப்படி யொன்றைக் கேள்விப்பட்டது யார்? "எனக்கு இன்னும் மணமாகவில்லையே, இது எப்படி ஆகும்?" என்றாள் அவள். ஆம், இவ்வார்த்தைகள் சற்றேனும் அவளுக்குப் புரிய வில்லை. தேவ வெளிப்பாடு அவளுக்கு இவ்விதம் வந்தது: "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" (லூக் 1:35). கன்னியொருத்திக்கு இதெல்லாம் விளங்கியிருக்கும் என்று நினைக்கிறீர்களோ? இந்தக் கடினமான, வழக்கத் திற்கு மாறான, வார்த்தைகள் அவளுக்குச் சற்றேனும் விளங்கவில்லைதான். ஆனாலும் அவள், "உமது **வார்த்தை யின்படியே** எனக்கு ஆகட்டும்" என்று அடிபணிந்தாள் (வச 38). தூதன் சொன்னது அவளுக்கு விளங்கவில்லை; ஆனால், இறைவெளிப்பாட்டிற்குக் கீழ்ப்படிய தன்னை அர்ப்பணித்தாள். விளைவு? உலக இரட்சகரைத் தனது கருவறையில் பத்து மாதங்கள் சுமக்கும் நிகரில்லா பாக்கியம் பெற்றாள்!

நமக்கிருப்பதைப்போல இத்தனை திரளான வேத ஆராய்ச்சி நூல்கள் வேறெந்தத் தலைமுறையினருக்கும் இருந்ததில்லை. இந்த அரிய சிலாக்கியத்திற்காய் ஆண்டவரைப் போற்றுவோம். ஆனால் சிலாக்கியங்களோடு பொறுப்புகளும் சேர்ந்தே வரும் என்பதை மறந்துவிடக் கூடாது. இதோ இயேசு தரும் எச்சரிப்பு: "தன் தலைவரின் விருப்பத்தை **அறிந்திருந்தும்**, ஆயத்தமின்றியும் அவர் விருப்பப்படி **செயல்படாமலும்** இருக்கும் பணியாள் நன்றாய் அடிபடுவான்... மிகுதியாய்க் கொடுக்கப்பட்டவரிடம் மிகுதியாகவே எதிர்பார்க்கப்படும். மிகுதியாய் ஒப்படைக்கப்பட்டவரிடம் இன்னும் மிகுதியாய்க் கேட்கப்படும்" (லூக் 12:47,48). "அதிக அடிகள் அடிக்கப்படுவான்" என்று இன்னொரு மொழியாக்கத்திலிருக்கிறது. "அதிக அடிகள்" என்றால் கடினமான தண்டனை அல்லது சிட்சை என்று பொருள். சங்கீதக்காரனின் சாட்சி இதை ஆமோதிக்கிறது: "நீர் என்னைத் தண்டிக்குமுன்பு நான் தவறிழைத்தேன்; ஆனால், இப்போது உம் வாக்கைக் கடைப்பிடிக்கிறேன்... எனக்குத் துன்பம் விளைந்தது எனது நன்மைக்காகவே; அதனால், உமது விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன்" (சங் 119:67,71).

பிரிய நண்பரே, எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆராய்ச்சி வேதங்களையும் ஆராய்ச்சி உதவி நூல்களையும் வாங்கிவிடுங்கள்; நன்றாய்ப் பயன்படுத்துங்கள். ஆனால் பிரசங்கியின் முடிவான வார்த்தைகளை நினைவிலிருத்திக் கொள்ளுங்கள்: பிரசங்கி 12:12,13, "பிள்ளாய்! ஓர் எச்சரிக்கை: நூல்கள் பல எழுதுவதால் பயன் ஒன்றுமில்லை. மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு. இவையனைத்திற்கும் முடிவுரையாக ஒன்று கூறுகிறேன்: கடவுளுக்கு அஞ்சி நட. அவருடைய கட்டளைகளுக்குக் **கீழ்ப்படி**; இதற்காகவே மனிதன் படைக்கப்பட்டான்!"

(*கீழ்ப்படிதலே மேல்படி!* Blessed are the Obedient! என்ற எனது நூலை வாசியுங்கள். ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதற்கான உதவிகளோடும், எடுத்துக்காட்டுகளோடும் ஓர் அழைப்பாக இந்நூல் எழுதப்பட்டது.)

10
வேத அறிவு உங்களிடம் தேங்கிவிடக்கூடாது.

வாழ்க்கையை நாம் முழுவதுமாய் அனுபவிக்கவேண்டுமென்று விரும்பும் நல்ல தேவன் நமக்குண்டு. வாழ்க்கையின் அனுபோகங்களில் சில நியாயமானவை, மற்றவை அனுமதிக்கக்கூடாதவை. கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் நியாயமற்ற அனுபோகங்களை நினைத்தும் பார்க்கக்கூடாது. நியாயமான அனுபோகங்களில்கூட நாம் இன்பம் காணுவதற்கு எல்லைகளும் வரம்புகளும் உண்டு. ஆனால் இதில் விதிவிலக்கானது ஒன்றே ஒன்றுதான். அதைத் திருப்பாடகன் சங்கீதம் 119:96இல் சாட்சியாய் அறிவிக்கிறான்: "சகல சம்பூரணத்திற்கும் எல்லையைக் கண்டேன்; உமது கற்பனையோ மகா விஸ்தாரம்." "எல்லை" என்பது "உச்ச நிலையைக்" குறிக்கும். வாழ்வின் இன்பங்கள் எல்லாவற்றிற்கும் சிகரம் என்று ஒன்றுண்டு; அதற்குப் பிறகு இறக்கம் தான். அதற்கப்பால் ஒன்றும் கிடையாது. ஆனால் இறைவார்த்தையைப் பொறுத்தவரை, அது சிகரத்திலிருந்து பள்ளத்தாக்குக்கு இறங்குவதல்ல, ஆனால் சிகரத்திலிருந்து சிகரத்திற்கு ஏறுவது! வாழ்வின் இன்பங்கள் யாவற்றின் மேலும் தற்காலிகம் பறந்துகொண்டிருக்கிறது. சாப்பிடுவது ரசனைதான்; எப்போழுதுமே சாப்பிட்டுக்கொண்டே இருக்க முடியுமா? அப்படியே, நாள் முழுவதும் விளையாடிக் கொண்டே இருக்கமுடியுமா? இறைவார்த்தையிலோ இடையறாது இன்பம் காணலாம்! அடுத்த வசனத்திலேயே திருப்பாடகன் தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுகிறான்: "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் **முழுவதும்** அது என் தியானம்!" (சங் 119:97).

வேதத்தை எப்படித் தியானிக்கிறோம் என்பதைப் பொறுத்துதான் அதில் நாம் ஆனந்தங்கொள்ளமுடியும். விசுவாசிகளில் அநேகருக்கு அவர்களது புதுவாழ்வின் துவக்கக் காலத்திலேயே வேதத்தை எப்படித் தியானிக்க வேண்டுமென்று கற்றுக்கொடுக்கப்படுவதில்லை. அதின் விளைவாக, அவர்கள் அங்குமிங்குமிருந்து தவறான தியான முறைகளையே பிடித்துக்கொள்ளுகிறார்கள். இச்சிறுநூலில் கொடுக்கப்பட்டுள்ள படிப்பினைகள் உங்களுக்குப் பல திருத்தங்களைத் தந்துள்ளன என்று நம்புகிறேன்.

''எப்படித் தியானிக்கக்கூடாது ?'' என்ற நமது தலைப்பில் கடைசிப் பாடம்: ''வேத அறிவு உங்களிடம் தேங்கிவிடக் கூடாது!''

திருவார்த்தையிலிருந்து நாம் கற்றுக்கொண்டவற்றை நமக்குள்ளேயே வைத்துக்கொள்ளாமல் அதைப் பிறரோடு பகிர்ந்துகொள்வது நமது விருப்புவெறுப்பைப் பொறுத்த தல்ல, அது நம்மீது விழுந்த தலையாய கடமையாகும். இப்படிப்பினையை கொலோசேயர் 3:16 தெளிவாய்த் தருகிறது: ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் நிறை வாய்க் குடிகொள்வதாக; முழு ஞானத்தோடு ஒருவருக் கொருவர் கற்பித்து அறிவுரை கூறுங்கள்.'' அதாவது, மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி நம்மிலிருந்து பொங்கி யெழும் அளவிற்கு நாம் கிறிஸ்துவின் வசனத்தினால் சம்பூரணமாய் நிறைந்திருக்கவேண்டுமாம். நீங்கள் கொடுத் துக்கொண்டேயிராவிட்டால் உங்களுக்குள்ளே பெற்றுக் கொண்டேயிருக்கமுடியாது. வெளியே கடந்துசெல்லும் அளவுக்குத்தான் உள்ளே வந்துகொண்டிருக்கும். மற்றவர் களுக்குப் பகிர்ந்துகொடுக்காத நிலை ஏற்படுமானால் நிச்சயம் தேக்கம் உண்டாகும். தேக்கம் உண்டாகிவிட்டால் தொடர்ந்து உள்ளே வருவதும் வெளியே செல்லுவதும் நின்றுவிடும். பகிர்ந்துகொள்ளுவதைக் குறித்து ஆண்டவர் சில மாறாத சத்தியங்களைக் கூறியுள்ளார்: ''கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச்

சரிந்துவிழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடு வார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்'' (லூக் 6:38). இந்த வசனம் வாழ்வின் வேறெந்தக் காரியத்துக்கும் பொருந்துகிறதோ இல்லையோ, திருவசனத்தைப் பகிர்ந்து கொடுக்கும் செயலுக்கு நூற்றுக்கு நூற்றுப்பத்து சதவீதம் பொருந்தும்! திருவசனத்திலிருந்து நீங்கள் கற்றவை களைத் தாராளமாக, சோர்ந்துபோகாமல், பிறரோடு பகிர்ந்து கொண்டேயிருங்கள்; நீங்களும் நிரம்பி வழிவீர்கள்.

இதே சத்தியத்தை நீதிமொழிகள் 11:25,26 வேறொரு எடுத்துக்காட்டுடன் விளக்குகிறது: ''உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்; தானியத்தைப் பதுக்கி வைக்கிறவனை மக்கள் சபிப்பார்கள்; விற்கிறவனுடைய தலையின்மேல் ஆசீர்வாதம் தங்கும்.'' திருவசனம்தானே தானியம் என்பது ? பிறரோடு நாம் பகிர்ந்துகொள்ளாத எத்தனை திருமறைச் சத்தியங்கள் நம்மிடம் தேங்கிக் கிடக்கின்றனவென்று யோசித்துப்பாருங்கள். இப்படியிருந் தால் நம்மீது ''சாபம்தான்'' குவியுமாம்! நம்மை நம்பி தேவன் நம்மிடம் கொடுத்துள்ள சத்தியங்களை நாம் பதுக்கிவைத் திருந்தால் எப்படி ? கொடுங்கள், கொடுக்கப்படும். அதா வது, திருவசனத்திலிருந்து நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டவைகளைப் பிறரோடு பகிர்ந்துகொண்டேயிருந் தால் தொடர்ந்து புதிது புதிதாக தேவன் நமக்குத் தமது வசனத்திலிருந்து சத்தியங்களை வெளிப்படுத்திக்கொண் டேயிருப்பார்.

நான் வேதத்தைத் தியானித்து குறிப்புகளைத் தயா ரிக்கும்போது ஓரளவுதான் அவ்வசனப்பகுதிகளைப் புரிந்து கொள்ளுகிறேன். மீதியுள்ளதை ஒவ்வொரு முறை அக் குறிப்புகளைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளும்போதும் கொஞ்சங்கொஞ்சமாய் விளங்கிக்கொள்ளுகிறேன். இந்தத் தத்துவமானது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும்

நெடுகவே காணப்படுகிறது. முற்பிதாவாகிய ஆபிரகாமின் வாழ்வில் இது வெளிப்பட்டது. அவனைக் குறித்து தேவன் சொன்னது: ஆதியாகமம் 18:17,19, "நான் செய்யவிருப்பதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?... ஏனெனில், நீதி, நேர்மை வழி நின்று எனக்குக் கீழ்ப்படியும்படி தன் புதல்வருக்கும், தனக்குப்பின் தன் வழிமரபினருக்கும் கற்றுத் தருமாறு ஆண்டவராகிய நான் ஆபிரகாமுக்கு வாக்களித்ததை அவன் நிறைவேற்றுவான் என்று தமக்குள் சொல்லிக் கொண்டார்." ஆபிரகாம் கடவுளிடமிருந்து பெற்றவற்றைத் தனது குடும்பத்தாருக்குச் சொல்லிக்கொடுப்பான் என்பதாலேயே கடவுள் அவனுக்கு எதையும் மறைக்கமாட்டாராம்!

அதேவிதமாக, தீமோத்தேயுவும் திருச்சத்தியங்களை உத்தமமாய்ப் பிறருக்குக் கடத்துவான் என்ற நம்பிக்கை பவுலுக்கு இருந்தது. எனவேதான் அவன் தீமோத்தேயுவுக்கு இவ்விதம் எழுதினான்: "சான்றார் பலர் முன்னிலையில் நீ என்னிடம் கேட்டவற்றை, மற்றவர்களுக்குக் கற்பிக்கும் திறமையுள்ளவர்களும் நம்பிக்கைக்குரியவர்களுமாகிய மனிதரிடம் ஒப்படை" (2 தீமோ 2:2). நம்மைக் குறித்து ஆண்டவர் இவ்விதம் சாட்சிகூற முடியுமா?

இக்கட்டத்தில், பெற்றோர்களுக்கு ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். மதிப்பிற்குரிய பெற்றோரே, திருவசனச் சத்தியங்களை உங்கள் பிள்ளைகளுக்குக் கடத்திவிடும் மாபெரும் பொறுப்பு உங்கள்மீதிருக்கிறது. உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் "பிரசங்கித்துக் கொண்டே" இருக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அது அவர்களுக்குப் பிடிக்காது. இயல்பான விதத்தில், அவர்களோடு உரையாடும் பாணியிலேயே, திருவசனத்தைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். நீதிமொழிகள் 4:1–4ஐக் கவனியுங்கள்: "பிள்ளைகளே, தந்தையின் போதனைக்குச் செவிசாயுங்கள்; மெய்யுணர்வை அடையும்படி அதில் கவனம் செலுத்துங்கள். நான் உங்களுக்கு நற்போதனை அளிக்கின்றேன். நான் கற்பிப்பதைப் புறக்கணியாதீர்கள்.

நான் என் தந்தையின் அருமை மைந்தனாய், தாய்க்குச் செல்லப் பிள்ளையாய், வளர்ந்துவந்தேன். அப்பொழுது என் தந்தை எனக்குக் கற்பித்தது இதுவே!" பெற்றோராகிய நாம் நமது பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்டவற்றை இப்போது நமது பிள்ளைகளக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். இந்தச் சங்கிலி எங்கும் அறுந்துபோகக்கூடாது. இவ்விதமாய்ச் செய்வதில் ஒரு பாட்டியம்மா உத்தமமாயிருந்தார்கள். அவர்களது பெயர் விவிலியத்தில் இடம்பெற்றுவிட்டது. தீமோத்தேயுவின் காரியத்தில் பவுல் அதனைக் குறிப்பிடுகிறான்: "வெளிவேடமற்ற உன் விசுவாசத்தை நினைத்துப் பார்க்கிறேன். இத்தகைய விசுவாசம் முதலில் உன் பாட்டியாகிய லோவி மற்றும் உன் தாயாகிய யூனிக்கி ஆகியோரிடம் காணப்பட்டது. இப்போது அது உன்னிடமும் உள்ளதென உறுதியாய் நம்புகிறேன்" (2 தீமோ 1:5). அன்பான பெற்றோரே, உங்களுக்கு எவ்வளவுதான் வேலையிருந்தாலும், பள்ளியில் கொடுக்கப்பட்ட வீட்டுப்பாடத்திற்காகப் பிள்ளைகளோடு எப்படியாவது நேரம் செலவழித்து விடுகிறீர்கள் அல்லவா? திருமறைக்கடுத்த காரியங்களுக்கு மட்டும் ஏன் இந்த பாரபட்சம்? பிள்ளைகளுக்குத் திருவசனம் சொல்லிக்கொடுப்பதற்கென்றே வாரத்திற்கு ஒரு மாலைப்பொழுதை ஏன் பிரித்துவைக்கக் கூடாது?

பிறரோடு திருமறைச் சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றவுடன், ஒரு பிரசங்க பீடத்தையே நினைத்து விடக்கூடாது. கூட்டங்களுக்குப் "பிரசங்கிக்கும்படி" அல்ல, தெரிந்தெடுத்த மனிதரிடம் "ஒப்படைக்கும்படியே" பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்தினான் (2 தீமோ 2:2). இது ஒரு சிறிய குழுவையே காட்டுகிறது. பகிர்ந்துகொள்ளுதல் பிரதானமாக ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத்தான். எனது சொந்த சாட்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1963 முதல் 1970 வரை, நான் கல்லூரி மாணவனாயிருந்த காலத்தில், அன்றன்று காலையில் நான் எனது தனித்தியான வேளையில் கற்றுக்கொண்ட திருவசனச் சத்தியங்களை,

அந்தந்த மாலையில் ஒரு சில மாணவர்களைக் கூட்டித் தினமும் பகிர்ந்துகொள்வேன். எனது முதல் சபையாகிய இரு மாணவர் பன்னிருவராய் வளர்ந்தனர். சிறிய காரியங் களில் உண்மையாயிருந்த என்னை ஆண்டவர் கனம் பண்ணினார். எனது திருமறைப் போதகப்பணியின் வளர்ச்சி உலகமறிந்தது.

கடவுள் உங்களுக்கு ஐந்து தாலந்துகள் கொடுத்திருந் தால் இன்னும் ஐந்தைச் சம்பாதியுங்கள். இரண்டு கொடுத் திருந்தால் இன்னும் இரண்டு. உள்ளவன் எவனோ, அவ னுக்கு இன்னும் கொடுக்கப்படும். பெரும்பாலான விசு வாசிகள் அந்த ஒரு தாலந்தைப் பெற்றவனைப்போல்தான் என்பது எவ்வளவு துக்கம்! "ஐந்து தாலந்து பெற்றவன்போல் எனக்கு அவ்வளவு வரமிலையே" என்று அவன் புலம்பிக் கொண்டிருந்திருப்பான். சுய பரிதாபத்தினாலேயே சுத்த சோம்பேறியானான். அந்த ஒரு தாலந்தைக் கொண்டு இன்னொன்றை அவன் சம்பாதித்திருந்தால், ஐந்து தாலந் தைப் பெற்றவனுக்கும் இரண்டு தாலந்தைப் பெற்றவனுக்கும் கிடைத்த அதே பாராட்டு அவனுக்கும் கிடைத்திருக்கும்.

பிரியமானவர்களே, ஒரு கன்வென்ஷன் அல்லது தியான முகாமிலிருந்து திரும்பி வரும்போது, உங்கள் குறிப்பேடு களில் நிறைந்துள்ள பக்கங்களிலுள்ளவைகளை உங்கள் வீட்டாரோடும் நண்பர்களோடும் பகிர்ந்துகொள்ளத் தாமதி யாதேயுங்கள். மற்றபடி மறந்துவிடுவீர்கள். எந்தெந்த ஆராய்ச்சி நூல்கள் உங்களுக்குப் பயனளித்திருக்கின்றன என்பதையும் சொல்லி அவற்றைப் பிறருக்கு அறிமுகம் செய்யுங்கள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!"

இவ்வரிசையில் வெளிவந்துள்ள,
அல்லது வெளிவரவிருக்கும், பிறநூல்கள்—

1. How not to Pray — எப்படி ஜெபிக்கக்கூடாது?
2. How not to Meditate — எப்படித் தியானிக்கக்கூடாது?
3. How not to Give — எப்படிக் கொடுக்கக்கூடாது?
4. How not to Worship — எப்படி ஆராதிக்கக்கூடாது?
5. How not to Battle — எப்படிப் போராடக்கூடாது?
6. How not to Minister — எப்படி ஊழியம்செய்யக்கூடாது?
7. How not to Think — எப்படிச் சிந்திக்கக்கூடாது?
8. How not to Repent — எப்படி மனந்திரும்பக்கூடாது?
9. How not to Believe — எப்படி விசுவாசிக்கக்கூடாது?
10. How not to Suffer — எப்படிப் பாடனுபவிக்கக்கூடாது?
11. How not to Plan — எப்படித் திட்டமிடக்கூடாது?
12. How not to Work — எப்படி வேலைசெய்யக்கூடாது?
13. How not to operate Gifts — எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது?
14. How not to Fellowship — எப்படி ஐக்கியப்படக்கூடாது?
15. How not to Sanctify — எப்படிப் பரிசுத்தப்படக்கூடாது?
16. How not to Sorrow — எப்படித் துக்கிக்கக்கூடாது?
17. How not to Help — எப்படி உதவிசெய்யக்கூடாது?

இவை ஒவ்வொன்றும் 5 மணி நேரம் ஓடக்கூடிய இரட்டை ஒளித்தட்டுகளிலும் (2-DVD Pack) உண்டு. விலை ரூ. 100/–

R. STANLEY
StanleyOnBible
13 Church Colony
Vellore 632 006, India

»¿°jt thœéš
ãiwthŒ tsu cztë¡F«
xU Âdrç¤ Âahd üš...



*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்
எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

அனைத்துச் சபையினரும்...
அனைத்து வயதினரும்...
அனைத்துத் துறையினரும்...
விரும்பி வாசிக்கும்
ஒரு புதிய படைப்பு!

432 பக்கங்கள்
விலை ரூ. 100/– அனுப்பச் செலவு ரூ. 25/–

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்,
ஆகிய மொழிகளிலும் உண்டு.

கிடைக்குமிடம்:

R. STANLEY
StanleyOnBible
13 Church Colony
Vellore 632 006, India

ஆசிரியரது பிற நூல்கள்

- அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?
- ஆனந்த அறுவடை
- இரட்சிக்கப்படுவது எப்படி?
- இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?
- உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- ஊழியரும் மக்களும்
- எதிர்நீச்சல் வாலிபர்
- எப்படி கொடுக்கக்கூடாது?
- எப்படி ஜெபிக்கக்கூடாது?
- ஐந்தப்பம் இருமீன்
- கண் திறக்கும் கட்டுரைகள்
- காட்டுத் தேன்
- கீழ்ப்படிதலே மேல்படி!
- சமநிலைக் கிறிஸ்தவன்
- சிறு நரிகள்
- திறந்த வானம்
- திரும்பிய மனிதன்
- தெளிவான பதில்கள் (1 & 2)
- நெஞ்சில் நெருப்பு
- பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!
- பொற்பழங்கள்
- மாணவ மணிகளுக்கு...
- வல்லமை தேவனுடையது!
- விசுவாச வாழ்வு

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச் செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
Tel: 91 44 28450411 <blc@bym-india.org>

StanleyOnBible.com

A WEBSITE FOR BIBLE LOVERS

CONTENTS

p ***My Letters***
Stanley talks heart to heart
with the Visitors of this Website.

p ***General Messages***
Enlightening Articles for Christian Growth

p ***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for
Personal Meditation and Pulpit Preaching

p ***Bible Studies***
Studies on specific themes
and select books of the Bible

p ***Doctrinal Essays***
Corrective Teaching to uphold
Sound Doctrines of the Bible

p ***Youth Matters***
Practical Guidelines to Young Men
and Young Women for Successful Living

p ***Leaders Column***
Biblical Insights and Practical Lessons
on Christian Leadership

p ***Missionary Challenge***
Calling Christians to obey
the Great Commission of Christ

p ***My Answers***
Answers to Questions
frequently asked but rarely answered

p ***Quotable Quotes***
Stanley's analytical Statements
about Christian Life and Ministry

Register your e-mail id in this website
to receive updates instantly.

ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...

ஜனவரி		
	காலை	*மாலை*
	மத்தேயு	**ஆதி**
1	1	1–3
2	2	4–6
3	3	7–9
4	4	10–12
5	5:1–26	13–15
6	5:27–48	16, 17
7	6:1–18	18, 19
8	6:19–34	20–22
9	7	23, 24
10	8:1–17	25, 26
11	8:18–34	27, 28
12	9:1–17	29, 30
13	9:18–38	31, 32
14	10:1–20	33–35
15	10:21–42	36–38
16	11	39, 40
17	12:1–23	41, 42
18	12:24–50	43–45
19	13:1–30	46–48
20	13:31–58	49, 50
		யாத்
21	14:1–21	1–3
22	14:22–36	4–6
23	15:1–20	7, 8
24	15:21–39	9–11
25	16	12, 13
26	17	14, 15
27	18:1–20	16–18
28	18:21–35	19, 20
29	19	21, 22
30	20:1–16	23, 24
31	20:17–34	25, 26

பெப்ருவரி		
	காலை	*மாலை*
	மத்தேயு	**யாத்**
1	21:1–22	27, 28
2	21:23–46	29, 30
3	22:1–22	31–33
4	22:23–46	34, 35
5	23:1–22	36–38
6	23:23–39	39, 40
		லேவி
7	24:1–28	1–3
8	24:29–51	4, 5
9	25:1–30	6, 7
10	25:31–46	8–10
11	26:1–25	11, 12
12	26:26–50	13
13	26:51–75	14
14	27:1–26	15, 16
15	27:27–50	17, 18
16	27:51–66	19, 20
17	28	21, 22
	மாற்கு	
18	1:1–22	23, 24
19	1:23–45	25
20	2	26, 27
		எண்
21	3:1–19	1, 2
22	3:20–35	3, 4
23	4:1–20	5, 6
24	4:21–41	7, 8
25	5:1–20	9–11
26	5:21–43	12–14
27	6:1–29	15, 16
28	6:30–56	17–19
29	7:1–13	20–22

மார்ச்		
	காலை	*மாலை*
	மாற்கு	**எண்**
1	7:14–37	23–25
2	8:1–21	26, 27
3	8:22–38	28–30
4	9:1–29	31–33
5	9:30–50	34–36
		உபா
6	10:1–31	1, 2
7	10:32–52	3, 4
8	11:1–18	5–7
9	11:19-33	8–10
10	12:1–27	11–13
11	12:28–44	14–16
12	13:1–20	17–19
13	13:21–37	20–22
14	14:1–26	23–25
15	14:27–53	26, 27
16	14:54–72	28, 29
17	15:1–25	30, 31
18	15:26–47	32–34
		யோசுவா
19	16	1–3
	லூக்கா	
20	1:1–20	4–6
21	1:21–38	7–9
22	1:39–56	10–12
23	1:57–80	13–15
24	2:1–24	16–18
25	2:25–52	19–21
26	3	22–24
		நியா
27	4:1–30	1–3
28	4:31–44	4–6
29	5:1–16	7, 8
30	5:17–39	9, 10
31	6:1–26	11, 12

ஏப்ரல்	காலை லூக்கா	மாலை நியா
1	6:27–49	13–15
2	7:1–30	16–18
3	7:31–50	19–21
4	8:1–25	ரூத்
		1 சாமு
5	8:26–56	1–3
6	9:1–17	4–6
7	9:18–36	7–9
8	9:37–62	10–12
9	10:1–24	13, 14
10	10:25–42	15, 16
11	11:1–28	17, 18
12	11:29–54	19–21
13	12:1–31	22–24
14	12:32–59	25, 26
15	13:1–22	27–29
16	13:23–35	30, 31
		2 சாமு
17	14:1–24	1, 2
18	14:25–35	3–5
19	15:1–10	6–8
20	15:11–32	9–11
21	16	12, 13
22	17:1–19	14, 15
23	17:20–37	16–18
24	18:1–23	19, 20
25	18:24–43	21, 22
26	19:1–27	23, 24
		1 இரா
27	19:28–48	1, 2
28	20:1–26	3–5
29	20:27–47	6, 7
30	21:1–19	8, 9

மே	காலை லூக்கா	மாலை 1 இரா
1	21:20–38	10, 11
2	22:1–20	12, 13
3	22:21–46	14, 15
4	22:47–71	16–18
5	23:1–25	19, 20
6	23:26–56	21, 22
		2 இரா
7	24:1–35	1–3
8	24:36–53	4–6
	யோவா	
9	1:1–28	7, 8, 9
10	1:29–51	10–12
11	2	13, 14
12	3:1–18	15, 16
13	3:19–38	17, 18
14	4:1–30	19–21
15	4:31–54	22, 23
16	5:1–24	24, 25
		1 நாளா
17	5:25–47	1–3
18	6:1–21	4–6
19	6:22–44	7–9
20	6:45–71	10–12
21	7:1–27	13–15
22	7:28–53	16–18
23	8:1–27	19–21
24	8:28–59	22–24
25	9:1–23	25–27
26	9:24–41	28, 29
		2 நாளா
27	10:1–23	1–3
28	10:24–42	4–6
29	11:1–29	7–9
30	11:30–57	10–12
31	12:1-26	13, 14

ஜுன்	காலை யோவான்	மாலை 2 நாளா
1	12:27–50	15, 16
2	13:1–20	17, 18
3	13:21–38	19, 20
4	14	21, 22
5	15	23, 24
6	16	25–27
7	17	28, 29
8	18:1–18	30, 31
9	18:19–40	32, 33
10	19:1–22	34–36
		எஸ்றா
11	19:23–42	1, 2
12	20	3–5
13	21	6–8
	அப்	
14	1	9, 10
		நெகே
15	2:1–21	1–3
16	2:22–47	4–6
17	3	7–9
18	4:1–22	10, 11
19	4:23–37	12, 13
		எஸ்தர்
20	5:1–21	1, 2
21	5:22–42	3–5
22	6	6–8
23	7:1–21	9, 10
		யோபு
24	7:22–43	1, 2
25	7:44–60	3, 4
26	8:1–25	5–7
27	8:26–40	8–10
28	9:1–21	11–13
29	9:22–43	14–16
30	10:1–23	17–19

"திருவசனம் பொன்னினும் விலைமிக்கது!"

ஜுலை	காலை அப்	காலை யோபு
1	10:24–48	20, 21
2	11	22–24
3	12	25–27
4	13:1–25	28, 29
5	13:26–52	30, 31
6	14	32, 33
7	15:1–21	34, 35
8	15:22–41	36, 37
9	16:1–21	38–40
10	16:22–40	41, 42
		சங்கீதம்
11	17:1–15	1–3
12	17:16–34	4–6
13	18	7–9
14	19:1–20	10–12
15	19:21–41	13–15
16	20:1–16	16, 17
17	20:17–38	18, 19
18	21:1–17	20–22
19	21:18–40	23–25
20	22	26–28
21	23:1–15	29, 30
22	23:16–35	31, 32
23	24	33, 34
24	25	35, 36
25	26	37–39
26	27:1–26	40–42
27	27:27–44	43–45
28	28	46–48
	ரோமர்	
29	1	49, 50
30	2	51–53
31	3	54–56

ஆகஸ்டு	காலை ரோமர்	மாலை சங்கீதம்
1	4	57–59
2	5	60–62
3	6	63–65
4	7	66, 67
5	8:1–21	68, 69
6	8:22–39	70, 71
7	9:1–15	72, 73
8	9:16–33	74–76
9	10	77, 78
10	11:1–18	79, 80
11	11:19–36	81–83
12	12	84–86
13	13	87, 88
14	14	89, 90
15	15:1–13	91–93
16	15:14–33	94–96
17	16	97–99
	1 கொரி	
18	1	100–102
19	2	103, 104
20	3	105, 106
21	4	107–109
22	5	110–112
23	6	113–115
24	7:1–19	116–118
25	7:20–40	119:1–88
26	8	119:89–176
27	9	120–122
28	10:1–18	123–125
29	10:19–33	126–128
30	11:1–16	129–131
31	11:17–34	132–134

செப்டம்பர்	காலை 1 கொரி	மாலை சங்கீதம்
1	12	135, 136
2	13	137–139
3	14:1-20	140–142
4	14:21-40	143–145
5	15:1-28	146, 147
6	15:29-58	148–150
		நீதி
7	16	1, 2
	2 கொரி	
8	1	3–5
9	2	6, 7
10	3	8, 9
11	4	10–12
12	5	13–15
13	6	16–18
14	7	19–21
15	8	22–24
16	9	25, 26
17	10	27–29
18	11:1-15	30, 31
		பிரசங்கி
19	11:16-33	1–3
20	12	4–6
21	13	7–9
	கலாத்தியர்	
22	1	10–12
		உன்
23	2	1–3
24	3	4, 5
25	4	6–8
		ஏசாயா
26	5	1, 2
27	6	3, 4
	எபேசியர்	
28	1	5, 6
29	2	7, 8
30	3	9, 10

"திருவசனம் தேனினும் இனிமையானது!"

அக்டோபர்		
	காலை	*மாலை*
	எபேசியர்	**ஏசாயா**
1	4	11–13
2	5:1–16	14–16
3	5:17–33	17–19
4	6	20–22
	பிலிப்பியர்	
5	1	23–25
6	2	26, 27
7	3	28, 29
8	4	30, 31
	கொலோ	
9	1	32, 33
10	2	34–36
11	3	37, 38
12	4	39, 40
	1 தெச	
13	1	41, 42
14	2	43, 44
15	3	45, 46
16	4	47–49
17	5	50–52
	2 தெச	
18	1	53–55
19	2	56–58
20	3	59–61
	1 தீமோ	
21	1	62–64
22	2	65, 66
		எரே
23	3	1, 2
24	4	3–5
25	5	6–8
26	6	9–11
	2 தீமோ	
27	1	12–14
28	2	15–17
29	3	18, 19
30	4	20, 21
	தீத்து	
31	1	22, 23

நவம்பர்		
	காலை	*மாலை*
	தீத்து	**எரேமியா**
1	2	24–26
2	3	27–29
3	**பிலேமோன்**	30, 31
	எபிரெயர்	
4	1	32, 33
5	2	34–36
6	3	37–39
7	4	40–42
8	5	43–45
9	6	46, 47
10	7	48, 49
11	8	50
12	9	51, 52
		புலம்பல்
13	10:1–18	1, 2
14	10:19–39	3–5
		எசேக்
15	11:1–19	1, 2
16	11:20–40	3, 4
17	12	5–7
18	13	8–10
	யாக்கோபு	
19	1	11–13
20	2	14, 15
21	3	16, 17
22	4	18, 19
23	5	20, 21
	1 பேதுரு	
24	1	22, 23
25	2	24–26
26	3	27–29
27	4	30–32
28	5	33, 34
	2 பேதுரு	
29	1	35, 36
30	2	37–39

டிசம்பர்		
	காலை	*மாலை*
	2 பேதுரு	**எசேக்**
1	3	40, 41
	1 யோவான்	
2	1	42–44
3	2	45, 46
4	3	47, 48
		தானியேல்
5	4	1, 2
6	5	3, 4
7	**2 யோவான்**	5–7
8	**3 யோவான்**	8–10
9	**யூதா**	11, 12
	வெளி	**ஓசியா**
10	1	1–4
11	2	5–8
12	3	9–11
13	4	12–14
14	5	**யோவேல்**
		ஆமோஸ்
15	6	1–3
16	7	4–6
17	8	7–9
18	9	**ஒபதியா**
19	10	**யோனா**
		மீகா
20	11	1–3
21	12	4, 5
22	13	6, 7
23	14	**நாகூம்**
24	15	**ஆபகூக்**
25	16	**செப்பனியா**
26	17	**ஆகாய்**
		சகரியா
27	18	1–4
28	19	5–8
29	20	9–12
30	21	13, 14
31	22	**மல்கியா**

“திருவசனம் வானினும் உயர்ந்தது!”